கிராம ஊழியம்.

V 7. No. 44. 8.11.1934.

[illegible]
M211,N28KN
N34.7.44c
199194

KALANILAYAM

தனிப்பிரதி விலை அணா 0-2-6.

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0
புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 7.] 1934 ஆு நவம்பர் மீ 8உ [No. 44

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 689

2. தமிழ்ப் பாடம்—(இலக்கணம்) 691

3. கம்பராமாயணம் (வாலிவதைப் படலம்)
T. N. சேஷாசலம் B.A., B.L. 693

4. சூளாமணி (இரதநூபுரச் சருக்கம்)
வித்துவான்.
T. P. மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை M.A., B.L. 697

5. நம்மாழ்வார் வைபவம் (7-ம் பத்து, 1-ம் தசகம்)
K. இராஜகோபாலாச்சாரியார் B.A., B.L. 699

6. இரத்நாவளி (அங்கம் 1.)
(வடமொழிநாடக மொழிபெயர்ப்பு) 701

7. வர்த்தமானம் 704

கலாநிலயம்

எத்தைக் கண்டு இச்சை கொள்வோம் 12.

இதயத்துள் முளைத்து ஆன்மாவில் வேரூன்றி விண்ணளாவி வளர்ந்து நற்பெரும் வாழ்க்கைச்செல்வமாகத் தழைத்தற்குரிய இம்மரபு அல்லது கல்சரை இழந்துளோம் என்பதை, முன்னிதழில் கண்டபடி, காட்டியபின்னேனும் அறிந்துகொள்ளக் கூடிய கல்வியும் அறிவும் வாய்த்தவர் மனத்தில் இப்பொழுது ஒரு கேள்வி எழுவது இயற்கை—இனி என்னசெய்யலாம் ?

நோயினால் உடல்நலம் இழந்தவர் மீண்டும் சுகம் பெறுவதற்கு இருவகை முயற்சிகள் செய்யவேண்டுமென்பது யாவரும் அறிந்ததே. ஒன்று, அந்நோய்க்குக் காரணமாயிருப்பவைகளை விலக்குதல்; மற்றது, சுகத்திற்கு ஆதாரமாயிருப்பவைகளை உட்கொள்ளுதல். வாழ்க்கைநலத்தினை இழந்தவர்களுக்கும் இம்முறைகள் ஒக்கும். இக்காலம், "முன்னேற்றம்" என்னும் பெயரால் செய்யப்படுகின்ற முயற்சிகள் அனைத்தும் முதலிலே விலக்கப்பெறுமானால் வாழ்க்கைச் செல்வத்திற்குக் களையாயிருக்கும் புதர்கள் கழிக்கப்பெற்றதாம். பொல்லாத பகை பின்னிருந்து தள்ள அதனினும் பொல்லாத பேராசை முன்னிருந்திழுக்க 'நான் நான்' என்று ஒன்றைவிட்டு ஒன்றைப்பற்றி அலைகின்ற அவலமும், ஒரு பொருளும் ஒரு கருத்தும் இல்லாமல் ஒலமிடுகின்ற ஆரவாரங்களுமே,முன்னேற்றமென்று முழங்கப்பெறுகின்றனவே யன்றிச் சற்றேனும் வேறொன்றுமில்லை, சரதம். பகையும் பயமும் பெருமையும் கடவுளை நம்பாத குருட்டுத்தனமும் அல்லாமல் வேறு எதனாலும் இவ்வியக்கங்கள் இயக்கப்பெறுவதில்லை, சரதம். அரசியல் முன்னேற்றங்களும் அப்படியே, பொருளாதார முன்னேற்றங்களும் அப்படியே; சமயமுன்னேற்றங்களும், கல்விமுன்னேற்றங்களும், நம்ஆசாரமுன்னேற்றங்களும், ஏனைய பல முன்னேற்றங்களும், எல்லாம் அப்படியே; இதிலோர் சந்தேகமில்லை. நாளைக்கே,எல்லாரும் ஒன்றுகூடி "எங்களுக்கு இவ்வரசியல் வேண்டா, அரசாங்க 'இலக்காக்கள்' ஒன்றும் வேண்டா, வர்த்தகம் வேண்டா, வழக்குமன்றங்கள் வேண்டா, இப்பொழுது செய்யப்படுகின்ற முயற்சிகள் ஒன்றுமே எங்களுக்குவேண்டா" என்று வீரமுடன் நாம் தீர்மானம் செய்துவிடுவோமாயின், வாழ்க்கைச் செல்வத்தின் வேர்களை அரித்துக்கொண்டிருக்கும் புழுக்களை முதலில் அழித்தவர்களாவோம். இந்நிலையை, மெய்யுணர்வில்லாத சில சரித்திரகாரர் சட்டமற்ற கோலாகலம் (anarchy) எனக் கருதுவார். இது தவறு. பொய்யடைந்த நெஞ்சினர்கள் புகட்டும் இச்சட்டங்களை விட்டு, நிரந்தரமான தர்மத்திற்குக் கட்டுப்பட்டு நடப்போம் என்னுமோர் துணிவையே அம்மனத்திட்பம் காட்டும்.அல்லாமல், சட்டப்படி இப்பொழுது நடைபெறுகின்ற கோலாகலத்திற்கு,சட்டமில்லாமையால் அப்பொழுது நடைபெறக்கூடிய கோலாகலம் ஒன்றும் அதிகமாய்விட இயலாதே.

உண்டிருந்து முடிவதற்குப் பொருளின் வருவாய் அவசியம்போலத் தோன்றுவதாலும், அப்பொருள்

வர்த்தகத்தால் விளைகின்றபடியாலும், அவ்வர்த்தகத்தைக் காப்பதற்கு அரசியல் முறைகள் அமையவேண்டியே யிருப்பதாலும், இன்னவைகளுக்கு ஆதாரமாக ஏனைய பல சட்டங்களும் முறைகளும் அமைப்புக்களும் இன்றியமையா திருத்தலாலும், இவைகளெல்லாம்இல்லாக்கால் மனிதர் பட்டினிகிடந்து மடிவதேயன்றி வேறு முடிவில்லை என்று எண்ணி, இவைகளை விட்டொழிக்க அஞ்சுவார். இதுபேதைமையினின்று பிறக்கின்றவீஞ்ஞான ஓர் அச்சம் "பிரதிவ்யாம் அன்ன பூர்ணாயாம் வயம் அன்னஸ்ய காங்க்ஷிண:" என்னவுரைத்தார்ஒரு உத்தமர். "இலமென்றுஅசைஇயிருப்பாரைக் காணின் நிலம் என்னும் நல்லாள் நகும்" என்னும்இதுபொய்யாமொழிப்புலவர்தம் பொன்னுரை. * மற்று, அப்படித்தான் பசியால் இன்மையால் வறுமையால் வருந்தவேண்டி நேர்ந்தாலும், "வருந்தட்டுமே, அதனால் என்" என்று வாய்விட்டுத் தாமஸ் கார்லைல் போன்ற தீரர்கள் விளம்புவார். அன்னவரனைய மேன்மக்களை, வாய்மையைவிடாது நின்றுரைக்கும் வீரர்களை, மெய்யுணர்வுடைய சான்றோர்களை, கல்வியின் நலமெலாம் கைவந்த வித்தகர்களை, தத்துவத்தின் உயிர்நிலையாகிய உண்மைப் பெரியோர்களை இந்நாள் எங்குங்காணுமல், போலிவீரர்களையே போகும்இடமெல்லாம் இடறிவிழவேண்டிவருகின்றஇப்பிழையினை, பழியினை, பாழ்மையை, யாரிடத்துஉரை செய்து ஆறுவோம்.

இன்னவாறு ஓரே நாளில், புதியதுபுகுந்த இக்களைகளை யெல்லாம் கழித்துவிட்டு வாழ்க்கைச் செல்வத்தை எய்தும் நெறியில்நாளையே எல்லாரும் புகலாம். இதனினும் எளியது வேறொன்று மில்லை. இதற்குச் சங்கங்கள் பிரசாரங்கள் புரட்சிகள் போராட்டங்கள் ஒன்றுமே வேண்டா. இதயமே வேண்டும். மற்றவர் தரப்பெறுவதும் அன்று அவ்விதயம். எல்லோர் இடத்திலும்இயற்கையிலேயே இருக்கின்றது. அதற்குத் துரோகம் செய்யாமலிருந்தால் போதும்; வெளி வாழ்க்கையைப் புண்படுத்துகின்ற எல்லாத் தொல்லைகளும் அல்லல்களும் அன்றே தீர்ந்தன. இத்துணையெளிதாக இது இருப்பதாற்றான் ஒருவரும் அதனை மனமூன்றிஆராயாமல்விட்டுவிடுகின்றனர். இத்துணை எளியவகையில் அத்துணைப்பெரியநன்மை எங்ஙனம் வாய்க்கும் என்னத் திகைத்து இதனைச் சிந்திப்பதே பேதைமை, என்னுமோர் மருட்கை மனிதரை மேற்கொள்கின்றது. எனினும், ஒன்று கூறுதல் வேண்டும். இது இயல்வதாயினும் ஆகுக, இயலாததாயினும் ஆகுக. அன்னதோர் நன்னிலை வாய்ப்பதற்குமாத்திரமன்றி, வாய்த்ததேனும் அதனைக் காப்பதற்கும், நம்முடைய மனம் அம்மரபின் செம்மையை நிலைபெற அடைந்ததாய் இருத்தலன்றோமுறை. ஆதலின், மற்றவைகளெல்லாம் எவ்வாறு இருப்பினும், அம்மரபிற்குரிய வித்துக்களை நம் மனத்திடையே விதைத்துக் கொண்டிருக்க வேண்டுமென்பது இந்தக் காலத்தில் யாதினும் அவசியமாய் நிற்கின்றது. இம்மேன்மையை உய்த்துணர்ந்தவர், செவ்விய மதுரஞ்சேர்ந்தநற்பொருளிற் சீரிய கூரிய தீஞ்சொல் வெளவிய கவிஞர்தாம். தாம் உணர்ந்ததுமல்லாமல் நமக்கு உணர்த்தவல்லவர்களும் அவர்களே. எனின், அன்னவர்தம் மொழிகளுடன் பழகுவதல்லால் நமக்கு வேறு கதியில்லை. அச்செம்மையை எங்ஙனம் நமக்குக் கைவந்துதவும்படி புரிகின்றார்கள் அப்புலவர் என்பதற்கோர் உதாரணங் காட்டுவதுடன் இவ்வரிசைத் தலையங்கங்களை முடிக்கலாம்.

அகத்துறை யளாவிய 'ஐங்குறு நூற்றின்' முதல் நூறாகிய மருதத்தைப் பாடிய ஓரம்போகியார், அம்முதனூற்றின் முதற்பத்தாகிய வேட்கைப்பத்தின் முதற்பாசுரமாகிப் பாடிய பாட்டொன்றே, இம்மரபானதுஇதயத்தைத்தழுவிக்கொள்ளுந்தன்மையைக் காட்டுவதற்குப் போதுமே. பரத்தையை நச்சித் தன் தலைவியைப்பிரிந்து நெடுங்காலம்நீங்கிய ஒருதலைவன், அவ்வொழுக்கந் தகாது எனத் தெளிந்தமனத்தினனாகி, மீண்டுவந்து தன் தலைவியின் ஊடலை உணர்த்தி அவளோடு வாழ்ந்துவருங்காலத்தில் ஒரு நாள், தன் பண்டைய ஒழுக்கத்தைக் குறித்துத் தோழியுடன் சொல்லாடுங்கால், "நான் அவ்வாறு பிரிந்து ஒழுகிய காலத்தில் நீங்கள் இங்கு என்ன நினைத்துக்கொண்டிருந்தீர்" என்றுவினவ, அதற்கு அத்தோழிஇயம்பிய மொழிகள் இவை—

வாழி யாதன் வாழி யவினி
நெற்பல பொலிக பொன்பெரிது சிறக்க
வெனவேட் டோளே யாயே யாமே
நனைய காஞ்சிச் சினைய சிறுமீன்
யாண ரூரன் வாழ்க
பாணனும் வாழ்க வெனவேட் டேமே.

[ஆதன் அவினி என்னும் நம் அரசன் வாழ்க வென்றும், செல்வளம் பொலிக வென்றும், செல்வம் பெரிது சிறக்க வென்றும், எங்கள் தலைவி விரும்பினவளாயிருந்தாள். நாங்களோ, மொக்குக்களையுடையகாஞ்சிமரமும் சினைப்பட்ட சிறுமீன்களுமுடைய அழகிய ஊரினனாகிய நீ வாழ்கவென்றும், உன்னைப் பரத்தையரோடு நட்புச்செய்வித்த அந்தப் பாணனும் வாழ்கவென்றும் விரும்பினவர்களாய் அமர்ந்து இருந்தோம்.]

"எம்மை மறந்து அகன்றாரை யாங்களும் மறந்து, வேறுவேறு நினைத்திருந்தோம் காண்" என நொந்து மெல்லமெல்ல நிந்திப்பதுபோன்று மருதத்திணைக்கேற்ப இந்தப் பாசுரம் அமைந்திருக்கின்றதானாலும், அதனுடைய ஆழத்தில் தழுவித் திளைத்துத் தூங்குகின்ற மரபின் பெருமையால் நம் இதயத்தைக் கவர்கின்றது. பரத்தையை விழைந்தவொரு கணவனால் கைவிடப்பட்ட மனைவியின் நிலைமையைக்காட்டிலும் தன்னையே நினைத்துக்கொண்டிருக்கவேண்டிய நிலை வேறொன்று நாம் சிந்தித்தல் அரிது. "என்னை விட்டுச் சென்றானே; நான் தனியே புலம்ப அவன் பரத்தையொடு இன்பந் துய்க்கின்றானே; இத்துணை யெளியளோ நான்; அவன் தான் மீண்டு வருதற்கொரு நெறியில்லையோ; வந்தாலென் ஐயோ நான் இழந்த இத்தலைமை இழந்ததே யன்றோ" என்று இந்நணம் தன்னைப்பற்றியே நினைத்துநினைத்துத் தன் வாழ்க்கை பழுதாயிற்றென்ன மாழாந் திருத்தலைவிட்டு, "உலகத்தைக் காக்குமாறு அரசன் வாழவும், விருந்தினரை ஓம்புமாறு நெற்பல பொலியவும், இரவலர்க் கீயுமாறு பொன் பெரிது சிறக்கவுமே ஒருத்தி நோற்றனள் என்றால், தன்னினும் அகன்ற மேலாய தொன்றன்பொருட்டு வாழ்கின்ற வாழ்க்கைச் செல்வத்தின் வளப்பத்தை வேறு எதன்பாற் சென்று காணல்வேண்டும்? 'யாணரூரன் வாழ்க' என்றதோடு 'பாணனும் வாழ்க' என்றோர் பரிகசமும் கலந்துகொண்டாளாயினும், தோழி நினைத்த அளவுகூட மனைவி தலைவனை நினைக்காமல் அந்த நேரத்தையும் உற்றவர்க்குதவுகின்றவோர் நன்மையை விரும்புவதிற் செலுத்திய பெற்றியைச் செப்புவது மன்றி, "எமக்குப் பொல்லாங்கு செய்தாரும் வாழ்க" என்றவோர் எண்ணத்தின் மரபினையும் எடுத்துக் காட்டுகின்றாள்.

ஏனைய மொழிகளில் இத்தகைய பாடல்கள் எத்துணை உளவென்று நாமொன்றமிங்கு வேற்றுமைப்படுத்திப் பேசவேண்டா. பண்டைத் தமிழ்இலக்கியம் என்று இருப்பனவெல்லாம், இன்னவைகளே. மரபினதுமேன்மையை நம்முடைய இதயத்துள் இழைத்துவைப்பன இவ் வைங்குறுநூறேபோல், கலித்தொகை, குறுந்தொகை, நற்றிணை அனைய எத்தனையோ பல. இன்னவைகளின் உறவினை நாம் ஏற்றுக்கொள்வோமாயின், அவைதாம் செல்வவாழ்க்கையாம்இருளினின்றுநம்மை இதயங்கொடுத்து இனிதுஅழைத்துவந்து வாழ்க்கைச்செல்வத்துப் பேரொளியில் நிலைபெறச்செய்து அவ் வாழ்க்கையில் இச்சைகொண்டு பொருளோடும்பயனோடும் வாழவைக்குமே. அந்நாட்களில் அவ்வாறுவாழ்கின்ற ஓர் வாழ்க்கைக்கிடையே ஒழிந்தபொழுது வில்ரோன்டின்கடிதத்தைஎடுத்துப் படிப்போமாயின், இக்கடிதத்தின்பொருளும் பயனுமென்னவோ என்று சிறிதேனும் அறியமாட்டாமல் திகைப்போம்; திகைப்புத் தெளியும்போது சிரிப்பே வரும்.

அன்னதோர் வாழ்க்கை கைவருமாறு நமது தமிழன்னையை வலம்வந்துவணங்குமொரு வைபவத்திற்காகவே இந்தக் கலாநிலயம் முழு இதயமுடன் எல்லோரையும் இனிதுஅழைக்கின்றது. இதுகாறும் மக்கள் அத்தமிழணங்கைப் புறக்கணித்தாராயினும், அல்லது தமிழ் தம்மைவளர்ப்பதுபோகத் தாம்தமிழை வளர்க்கின்றோம் என்னும் வம்பினால் வீணுக்கினாராயினும் என்ன—பொல்லாத சேயெனினும் நம் தமிழன்னையோ நம்மைத் தள்ளமாட்டாள். கண்ட தெய்வத்தையெல்லாம் கும்பிட்டுக் கும்பிட்டுக் கைகள் சளைத்திருக்கின்ற இப்பொழுதேனும், தமிழிலக்கியமாம் அன்னையின் அருளிற்குத் தம்மை ஆளாக்கிக் கொள்ள மறுப்பது மதியன்று, அழகுமன்று. மற்று இதுவே விதியென்ற இக் கலாநிலயம் எண்ணவும் எண்ணுது.

* இவ்விடயங்கள், 4-வது வால்யூம் (1931), 44, 45, 46 47 இதழ்களில், "நல்லான் நகை" என்னுந் தலைப்பின்கீழ் விரிவாக எழுதப்பெற்றிருக்கின்றன. அவை இச் செவ்வியில் மீண்டும் ஓதிக்கொள்ளத்தக்கன.

தமிழ்ப்பாடம் 144.

[677-வது பக்கத் தொடர்ச்சி]

இலக்கணம்

மெய்யீற்றுப் புணர்ச்சியில் யகர ரகர ழகர மகர வகர மெய்யீறுகள், வருமொழிமுதல் மெய்களோடு எவ்வாறு புணரும் என்பதை இதுவரையில் கூறினோம். இனிக் கூறுவதற்கு ணகர னகர லகர ளகர மெய்யீறுகள் இருக்கின்றன. இவைகளையுந் தனித்தனியே எடுத்துக்கொண்டு வருமொழிமுதலில் இடையின மெல்லின வல்லின மெய்கள் வருங்கால் எவ்வாறு புணரும் என்பதை இனிப் பார்ப்போம். மற்றைய ஈற்றுப் புணர்ச்சிகளுக்கு உரிய விதிகளைப் போன்றே இந்தவிதிகளும், வருமொழியின்முதலில் என்ன மெய் நிற்கின்ற தென்பதையும், நிலைமொழியும் வருமொழியும் எந்தத் தொடராய் அமைந்திருக்கின்றன என்பதையும் பொருந்தியிருக்கின்றன.

ணகர மெய்.

I நிலைமொழி யிறுதியில் ணகரமெய் + வருமொழி முதலில் இடையின மெய்.

இடையின மெய்கள் ஆறனுள் மொழிக்குமுதலில் வரக்கூடியன யகரம் வகரம் ஆகிய இவை இரண்டே. மற்ற, ரகர லகர ழகர ளகரங்கள் தமிழில் மொழிக்கு முதலில் வாரா.

(a) நிலைமொழி யிறுதியில் ணகரமெய்யும் வருமொழி முதலில் யகரமும் வருமாயின், யாதும் விகாரமின்றிப் புணரினும் புணரலாம், அல்லது ஒரு இகரம் தோன்றினும் தோன்றலாம். இது எல்லாத் தொடர்களுக்கும் ஒக்கும்.

மண் + யானை = மண்யானை என விகாரமின்றி இயல்பாயும், அல்லது, மண் + இ + யானை = மண் + ண் + இ + யானை = மண்ணியானை, என இகரம் தோன்றியும் புணரலாம். மண் + இ + யானை = மணியானை என்றாகாமல் மண்ணியானை என்று ஆவதற்கு விதி முன்னரே கூறப்பட்டிருக்கின்றது. நிலைமொழியீற்று மெய் தனிக்குறிலைச் சார்ந்திருப்பதால், அது, இப்பொழுது தோன்றிய உயிரோடு சேரும்போது இரண்டாக விரிந்து, ஒன்று உயிரை யேற்க மற்றது அப்படியே நின்றது— இது மண்ணால் செய்த யானை என விரியுமாகையால் மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை.

கண் + யாது = கண்யாது, அல்லது, கண்ணியாது.

(b) நிலைமொழியின் இறுதியில் ணகரமெய்யும் வருமொழிமுதலில் வகரமெய்யும் வருமாயின் எல்லாத்தொடரிலும் யாதும் விகாரமின்றி இயல்பாய்ப் புணரும்.

விண் + விளங்கியது = விண்விளங்கியது—எழுவாய்த்தொடர்.

மண் + வெட்டினன் = மண்வெட்டினன்—இரண்டாம்வேற்றுமைத் தொகை.

199194
m 211, N72KN
N34.7.44

புண் + வலி = புண்வலி–ஆறும்வேற்றுமைத் தொகை.

மண் + விளக்கு = மண்விளக்கு — மூன்றும்வேற்றுமை உருபும்பயனும் உடன்தொக்க தொகை.

காண் + வேந்தே = காண்வேந்தே — வினைமுற்றுத் தொகை.

உண் + விருந்து = உண்விருந்து —வினைத்தொகை.

மண் + விண் = மண்விண்—உம்மைத் தொகை.

II நிலைமொழியிறுதியில் ணகரமெய் + வருமொழி முதலில் மெல்லினமெய்.

மெல்லின மெய்களில் ங ஞ ந ம என்னு மிந்நான்கு எழுத்துக்களே மொழிக்குமுதலில்வரக்கூடும். இவைகளில் ஙகரம், சுட்டு அல்லது வினா எழுத்துக்களுடன் சேர்ந்து அங்ஙனம் இங்ஙனம் எங்ஙனம் யாங்ஙனம் எனவே வரும். ஆதலின் அதனை விட்டுவிடலாம்.

(a) நிலைமொழி யிறுதியில் ணகர மெய்யும், வருமொழிமுதலில் ஞகரம் அல்லது மகர மெய்யும் நிற்குமானால், எல்லாத் தொடர்களிலும் இயல்பாய்ப் புணரும்.

தூண் + முறிந்தது = தூண் முறிந்தது
நாண் + ஞெகிழ்ந்தது = நாண்ஞெகிழ்ந்தது } எழுவாய்த் தொடர்

உண் + மகனே = உண் மகனே
உண் + ஞமலி = உண் ஞமலி
(ஞமலி = நாய்) } வினைமுற்றுத் தொடர்

குறிப்பு:—நிலைமொழி ஏவல் வினைமுற்றாகையால், உண்ணு மகனே, உண்ணு ஞமலி, என உகரச்சாரியை பெற்றும் புணரலாம். ஆனால், உண்ஞமலி, என்பது உண்கின்ற ஞமலி என்று விரியக்கூடிய வினைத்தொகையாய் நிற்குமானால் அப்பொழுது சாரியை பெறாமல் உண்ஞமலி என்றே புணரலாகும்.

மண் + ஞிமிறு = மண்ஞிமிறு—மண்ணால் செய்த ஞிமிறு என்று விரியக்கூடிய இது மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை (ஞிமிறு = வண்டு)

கண் + மயக்கம் = கண் மயக்கம்—ஆறும் வேற்றுமைத்தொகை.

தூண் + முறித்தான் = தூண் முறித்தான்— இரண்டாம் வேற்றுமைத் தொகை.

(b) நிலைமொழி யிறுதியில் ணகரமெய்யும் வருமொழிமுதலில் நகர மெய்யும் நிற்றல்.

(1) நிலைமொழி ணகர மெய்யை ஈற்றிலுடைய இரண்டெழுத்துச் சொல்லாயிருந்து, அவ்விரண்டு எழுத்துக்களிலும் முதலெழுத்துக் குறிலாகவும் இருக்குமானால் வருமொழி முதலில் நகரம் வர— நிலைமொழியீற்று ணகரமெய் அப்படியே யிருந்து, வருமொழிமுதல் நகரம்மாத்திரம் எல்லாத் தொடர்களிலும் ணகரமாகத் திரியும்:—

விண் + நாடு = விண்ணாடு—இது விண்ணாகிய நாடு என விரியுமானால் பண்புத் தொகையும், அல்லது, விண்ணில் உள்ள நாடு, என விரியுமானால் ஏழாம்வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகையும் ஆகும்.

கண் + நீர் = கண்ணீர்—கண்ணிலிருந்து வரும் நீர் எனவிரியும் இது ஐந்தாம்வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை.

உண் + நீர் = உண்ணீர்—உண்ணுகின்ற நீர் என விரியும் இது வினைத்தொகை.

விண் + நோக்கினன் = விண்ணோக்கினன்—இரண்டாம் வேற்றுமைத் தொகை.

மண் + நாய் = மண்ணாய் — மூன்றும் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை.

உண் + நங்காய் = உண்ணங்காய்— வினைமுற்றுத் தொடர்.

கண் + நோக்கம் = கண்ணோக்கம்—ஆறும்வேற்றுமைத் தொகை.

(2) நிலைமொழி இரண்டெழுத்துக்களுக்கு மேற்பட்டதாகவேனும், அல்லது இரண்டெழுத்துக்களால் அமைந்ததாயின் முதலெழுத்து நெடிலாகவேனும், இருந்து ணகரமெய்யை ஈற்றில் உடையதாக, வருமொழிமுதலில் நகரமெய் நிற்குமானால் எல்லாத்தொடர்களிலும், முன் காட்டியபடி வருமொழிமுதலில் உள்ள நகரம் ணகரமாகத் திரிவது மாத்திரமல்லாமல் நிலைமொழியீற்றிலிருக்கும் ணகர மெய் கெட்டுவிடும்.

தூண் + நின்றது = தூண் + ணின்றது = தூணின்றது—எழுவாய்த் தொடர்—வருமொழி முதலிலுள்ள நி என்பது ணி என்று திரிந்து, தூண் என்னும் நிலைமொழியின் ஈற்றிலுள்ள ண் கெட்டு, தூணின்றது என ஆயிற்று.

காண் + நீ = காண் ணீ = காணீ — வினைமுற்றுத் தொடர்.

ஆண் + நாய் = ஆணாய்—பண்புத்தொகை.

அமண் + நெறி = அமணெறி—ஆறும்வேற்றுமைத் தொகை. (அமணர்களினுடையநெறி)

பரண் + நீங்கினன் = பரணீங்கினன் — ஐந்தாம் வேற்றுமைத் தொகை.

பூண் + நோக்கினன் = பூணோக்கினன் — இரண்டாம் வேற்றுமைத் தொகை.

III நிலைமொழியிறுதியில் ணகரமெய் + வருமொழிமுதலில் வல்லினமெய்.

மொழிக்குமுதலில் வரக்கூடிய க ச த ப என்னும் வல்லினமெய்கள் நான்கனுள், க ச ப என்ற மூன்று எழுத்துக்களை ஒன்றாகவும், த என்னும் எழுத்தை வேறாகவும் எடுத்துக்கொள்வோம்.

(a) நிலைமொழி யீற்றில் ணகரமெய் இருக்க, வருமொழிமுதலில் ககர, சகர, பகர மெய்கள் நிற்குமானால், ஆறும்வேற்றுமைத் தொகையிலும் மற்ற வேற்றுமை உருபும்பயனும் உடன்தொக்க தொகைகளிலும், பண்புத் தொகையிலும், நிலைமொழி யீற்று ணகரமெய் பெரும்பாலும் டகரமெய்யாகத்திரியும்:-

கண் + கடை = கட்கடை — ஆறும்வேற்றுமைத் தொகை.

கண் + பொறி = கட்பொறி—கண்ணாகிய பொறி எனவிரியும் இது பண்புத்தொகை.

மண் + குடம் = மட்குடம்–மூன்றும் வேற்றுமை உருபும்பயனும் உடன்தொக்க தொகை.

மண் + புழு = மட்புழு—ஏழாம்வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை.

கண் + சாடை = கட்சாடை – ஆறும்வேற்றுமைத் தொகை.

குறிப்பு:—இவ்விதிக்கு அடங்காத வழக்குக்களும் சொற்களும் சில உள. அவைகளை முற்றிலும் வரையறுத்து இயம்புதல் இயலாது. இலக்கியங்களில் இவை பயின்றுவருகின்ற விதங்களை ஓர்ந்து ஓர்ந்து தேர்ந்துகொள்ளவேண்டும். அவைகளில் சிலவற்றை மாத்திரம் இங்குக் காட்டலாம்:—

(1) ஆண், பெண், என்னும் பொதுப்பெயர்களுக்குப்பின் வல்லினம் வந்தால், எந்தத் தொடரினும், ணகரம் டகரமாகத் திரியாது.

பெண் + கை = பெண்கை—ஆறும் வேற்றுமைத் தொகை.

ஆண் + சாதி = ஆண் சாதி — பண்புத்தொகை.

பெண் + பறவை = பெண்பறவை-பண்புத்தொகை

பெண் + குணம் = பெண் குணம் - நான்காம்வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை. பெண்களுக்கு உரிய குணம் என விரியும்.

(2) பாண், உமண், அமண், போன்று, சாதி கூட்டம் முதலியவைகளைப்பற்றி வருகின்ற பெயர்களின் ஈற்றிலுள்ள ணகரமெய், வருமொழி முதலில் வல்லினமெய் வர, ஒருதொடரிலும் டகரமாகத் திரியாது.

பாண் + குடி = பாண்குடி
உமண் + சேரி = உமண்சேரி
அமண் + பள்ளி = அமண்பள்ளி } ஆறும் வேற்றுமைத்தொகை

[பாண் = பாடுவோர் சாதி; உமண் = உப்புவணிகர் சாதி; அமண் = அருகனை ஆராதிப்பார் கூட்டம்]

இவை, பாட்குடி, உமட்சேரி, அமட்பள்ளி, எனப் புணரா. மற்று, இயல்பாகவேனும், பாணக்குடி, உமணச்சேரி, அமணப்பள்ளி, என அகரச்சாரியை பெற்றேனும் புணரலாம்.

(3) ஊண், விண், கவண், பரண் என்னும் இந்நான்கு சொற்களின் ஈற்றிலுள்ள ணகரமெய், வருமொழிமுதலில் வல்லினம்வரினும் ஒரு தொடரிலும் டகரமாகத் திரியாது.

ஊண் + சுவை = ஊண்சுவை–ஆறும் வேற்றுமைத் தொகை.

விண் + கதிர் = விண்கதிர்–ஏழாம்வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கதொகை.

கவண் + குறி = கவண் குறி — கவணால் அடிக்கும் குறி—மூன்றும் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை.

பரண் + கால் = பரண் கால்—ஆறும் வேற்றுமைத் தொகை

(4) எட்டு என்னும் எண்ணலளவைச் சொல், எண் என நின்று புணரும்போது, அதனீற்றிலுள்ள ணகரமெய், வருமொழிமுதலில் வல்லினம் வரின் பண்புத்தொகையிலும் டகரமாகத் திரியாது.

எண் + குணம் = எண் குணம்
எண் + சாதி = எண் ஜாதி
எண் + பாகம் = எண் பாகம் } பண்புத்தொகை.

(5) சாண், என்னும் நீட்டலளவைச் சொல்லின் ஈற்றிலுள்ள ணகரமெய் வருமொழிமுதலில் வல்லினமெய் வரப் பண்புத்தொகையில் டகரமாகத்திரியலாமாயினும், திரியாமல் இயல்பாய்ப் புணர்வதே சிறப்புடைத்து.

சாண் + கோல் = சாட்கோல்— சாண்கோல்.

(b) ஆறும் வேற்றுமைத் தொகை, மற்ற வேற்றுமை உருபும்பயனும் உடன்தொக்க தொகை, பண்புத் தொகை, ஆகிய இத்தொடர்களல்லாத மற்றத் தொடர்களில் நிலைமொழி யீற்று ணகரமெய் வருமொழிமுதலில் வல்லின மெய் வர, டகரமாகத் திரியாமல் இயல்பாயிருக்கும்.

கண் + பெரிது = கண்பெரிது
தூண் + சிறிது = தூண்சிறிது } எழுவாய்த்தொடர்.

மண் + காத்தான் = மண்காத்தான்—இரண்டாம் வேற்றுமைத் தொகை.

மண் + படிந்தான் = மண் படிந்தான்—மண்ணிற் படிந்தான் என விரியும் இது ஏழாம்வேற்றுமைத் தொகை.

உண் + சோறு = உண் சோறு—வினைத்தொகை.

கண் + கை = கண் கை— உம்மைத் தொகை.

தூண் + புயம் = தூண் புயம்—தூண் போன்ற புயம் என விரியும் இது உவமத் தொகை.

குறிப்பு:—எள், என்னுந் தானியத்தைக் குறிக்கும் எண் என்னுஞ் சொல்லின் ஈற்றிலுள்ள ணகரமெய், எழுவாய்த் தொடர் முதலிய தொடர்களிலும், வருமொழி முதலில் வல்லின மெய் வருங்கால் டகரமாகத் திரியலாம். ஆனால் திரியாமல் இயல்பாய்ப் புணர்தலே சிறப்புடைத்து.

எண் + சிறிது = எட்சிறிது— எண்சிறிது.

ஆயினும், எண் + செடி = எட்செடி, எனப் பண்புத் தொகையில் திரிந்தே புணரும்.

கம்பராமாயணம்

கிஷ்கிந்தா காண்டம்—7. வாலிவதைப் படலம்

[680வது பக்கத் தொடர்ச்சி]

வணங்காத் தம்பியும் வணங்கிய தனயனும்.

இன்னணம் புலம்பிய தன்னருமைந்தனை, செங்கண்வாலி "நீ யினி அயர்வா யல்லை" என்று நெஞ்சுறப் புல்லி, "நாயகன் இராமன்செய்தநல்வினைப் பயனிது" என்னப் பின்னுஞ் சொல்வான்:—

தோன்றலு மிறத்த லூனுந்
துகளறத் துணிந்து நோக்கின்
மூன்றுல கத்தி னோர்க்கு
மூலத்தே முடிந்த வன்றே
யான்றவ முடைமை யாலிவ்
விறுதிவந் திசைந்த தியார்க்குஞ்
சான்றென நின்ற வீரன்
தான்வந்து வீடு தந்தான்.

[குற்றம்யாதுமறத் துணிந்து பார்க்குமிடத்து,பிறப்பதுமிறப்பதும் மூன்று உலகங்களிலேயும் இருக்கின்றவர் எல்

லோர்க்கும் முதலில்இருந்தே எற்பட்டிருக்கின்றன அன்றோ ? நான் நற்றவம் செய்திருப்பதால் எனக்கு இவ்வகை மரணம் கிடைத்தது. எல்லாருக்கும் சாக்ஷியாய் நிற்கின்ற வீரனுன இராமபிரான் தானே வந்து எனக்கு முத்திதந்தான்.]

பாலமை தவிர்நீ யென்சொற்
பற்றுதி யென்னி னைய
மேலொரு பொருளு மில்லா
மெய்ப்பொருள் வில்லுந் தாங்கிக்
கால்தரை தோய நின்று
கட்புலக் குற்ற தம்மா
மால்தரும் பிறவி நோய்க்கு
மருந்தென வணங்கு மைந்தா

[அப்பா, என்மைந்தனே, நீ பாலகன் என்னும் தன்மையைக் கடந்து எனது வார்த்தையை எற்றுக்கொள்ளவல்லையானல், ஒன்றுகூறுகின்றேன்கேள் — தனக்குமேலானவொருபொருள் இல்லாத அம்மெய்ப்பொருள்தானே ஒருவில்லையும் எந்திக்கொண்டு கால்கள் நிலத்திற் படும்படி நின்று நமதுகண்களுக்குத்தென்படலாயிற்று. என்ன ஆச்சரியம் பார்: மயக்கமுடைய பிறவிநோய்க்கு இவ்விராமன் மருந்தாவான் என்பதை எண்ணி அவனை வணங்குவாய்]

என்னுயிர்க் கிறுதி செய்தா
னென்பதை யிறையு மெண்ணு
துன்னுயிர்க் குறுதி செய்தி
யிவற்கமு ருற்ற துண்டேல்
பொன்னுயிர்த் தொளிரும் பூணுய்
போதுதி நிலைமை நோக்கி
மன்னுயிர்க் குறுதி செய்வான்
மலரடி சுமந்து வாழ்தி

[பொன்னின் பிரகாசத்தை வீசுகின்ற ஆபரணங்களை அணிந்தவனே, என் உயிரிற்கு முடிவுசெய்தான் என்பதைச் சிறிதும் எண்ணுமல், உன் உயிரிற்கு உரிய நன்மையை நாடிக்கொள்வாய். இவனுக்குப் பகைவரோடு போர் நேர்ந்ததானல் நீயும் அவனுக்குத் துணையாகப்போகக்கடவாய். நிலைபெற்ற உயிர்களுக்கு அவ்வைகளின் நிலைமைக்குத் தக்கபடி நன்மை செய்பவனுகிய இவனுடைய தாமரைமலர்போன்றபாதங்களைத் தலைமேற்கொண்டு வாழ்வாயாக.]

என்று இனியவாயஉறுதிகள் அனைத்துஞ்சொல்லித் தன் துணைத் தடக்கையால் தனயனைத் தழுவிக்கொண்டான். இராமபிரானது இணையடிவணங்கி யேவல் செய்து பிறவியைத் தீர்த்துக்கொள்ளும்படி சுக்கிரீவனுக்கு முன்கூறியஉறுதிகளையே மீண்டும் அங்கதனுக்குங் கூறினன் இவ்வாலி. அதுவுமன்றி, முன் வசிட்டன் மதித்து இராமன் என்னப் பெயரிட்ட மெய்ப்பொருளே இங்குநின்ற இவன் என்பதை இருவருக்கும் வற்புறுத்திக் காட்டினன். அங்கதன் வாலியின் சொற்களை அயிர்க்கும் தன்மையனல்லன் ஆதலின் இவனுக்குச் சான்றுகளோ யாதும் செப்பவேண்டிய அவசியமில்லை. மதவியல் குரக்குச்செய்கை மயர்வொடகற்றும்படி சுக்கிரீவனைத் தூண்டிய வாலி, "பாலமை தவிர் நீ என் சொற் பற்றுதி" என்று அங்கதனை வேறுபட வேண்டியதற்குங் காரணம் இதுவே. அன்றியும் அரசியலுக்கு உரிய உபாயங்களால் சுக்கிரீவனை நெறிநிறுத்தலாமெனச்சொல்லிய அந்தச் சொற்களை அங்கதனுக்கு இயம்பாமல் வாலி அறவே விடுத்த பெருமையும் அறிந்துகொள்ளற் குரியது. வான்மீகத்தில்,

"மகனே, இனி நீ சுக்கிரீவன் சொற்படி நின்று, காலமுமிடமு மறிந்து, சுகமடைதல் காரணமாக உனக்குநேருந் துக்கங்களைப் பொறுத்து நடந்துகொள்வாய். என்னிடத்தில் வளர்ந்ததுபோல நீ இன்னும் இருப்பாயாகில் சுக்கிரீவன் உன்னை மதிக்கமாட்டான். நீ ஒருபோதும் சுக்கிரீவனுடைய பகைவர்களோடு சேராதே. அவனுடைய நல்வாழ்விலே எப்பொழுதுங் கருத்துடையவனுய், அவனுக்கடங்கி நடந்துகொள். நீ யாருடனுவது அதிகநண்பு பாராட்டவேண்டாம், நண்பு பாராட்டாது நடக்கவும் வேண்டாம்; இவை யிரண்டும் மிக்க தீமை பயக்கும்; ஆதலால் நடுத்தரமாக நடந்துகொள்"

என்று வாலி உலகநெறியே கூறினன் ஆயினும், அவ்வளவே அந்தவாலிக்கு அமைந்திடு மென்பதனையும், பரம்பொருளைக் காட்சிகொண்டமையால் இனிச் சிறியன சிந்தியாதானுகிய தன் வாலிக்கு அன்ன நினைவுகள் அயாலயாகும் என்பதையும் உய்த்துணர்ந்த கம்பர், பிறவிதீர்ந்து வீட்டுநெறி வாய்க்கும் வகையே விளம்புமாறு செவ்விதின் மாற்றினர்.

இவ்வண்ணம் தன் தனயனுக்கு உறுதிகள் உரைத்ததுடன் வாலி நிற்கவில்லை. சான்றோரெல்லாம், மெய்ஞ்ஞான போதனைகள் மக்களுக்கு ஒருபுறம் செய்வதோடு, அப்போதனைகள் பயன்படுமாறு கடவுளின் அருளினையும் வேண்டிவேண்டி அம்மக்களுக்கு வாங்கியுந் தருவார். ஆதலின் வாலி இராமனை நோக்கி,

நெய்யடை நெடுவேற் றுனை
நீனிற நிருத ரென்னுந்
துய்யடைக் கனலி யன்ன
தோளினன் றெழிலுந் தூயன்
பொய்யடை யுள்ளத் தார்க்குப்
புலப்படாப் புலவ மற்றுன்
கையடை யாகு மென்றவ்
விராமற்குக் காட்டுங் காலை

[பொய் அடைந்த மனத்தவர்க்குத் தென்படாத ஞானரூபனே, நெய்பூசியுள்ள நீண்ட வேலைஎந்திய சேனைகளையுடைய கருநிறமுடைய அரக்கர் என்னும் பஞ்சுமூட்டைக்கு நெருப்பைப் போன்ற தோள்களையுடையவன் இந்த என் மைந்தன், செய்கையிலுந் தூய்மையானவன். இவன் உன் அடைக்கலமாவான், என்று தன் மைந்தனைக் காட்டியபொழுது]

தன்னடி தாழ்தலோடுந் தாமரைத் தடங்க ணானும்
பொன்னுடைவாளை நீட்டிநீயிதுபொறுத்தியென்று
னென்னலு முலக மேழு மேத்தின விறந்து வாலி
யந்நிலை துறந்து வானுக் கப்புறத் துலக னுனன்.

[அவ்வங்கதன் தன் அடிகளில் வணங்குதலும், தாமரைமலர்போன்ற பெரிய கண்களையுடைய இராமபிரானும், அன்னவாறே அங்கதனைத் தான் எற்றுக்கொண்டதற்கு அடையாளமாக, அழகிய தன் உடைவாளை எடுத்து நீட்டி, "இதனை நீ தாங்குவாய்" என்று அருளியபொழுது, எழுலோகங்களில் உள்ளவர்களும் துதித்தனர். பின் வாலியும் தன்உடம்பைவிட்டு வானுலகத்திற்குஅப்பாலுள்ள முத்தியுலகத்தை யடைந்தான்]

சுக்கிரீவனையு மிராமனுக்குக் கையடையாக்கினன் வாலி அங்கதனையும் ஆக்கினன். தனக்குரிய மனைவி

யையும் உரியதல்லா ஒருமண்ணையும் வேண்டித் தன் இன்னுயிர்க்குரிய காதலோடும் இராமனை முன்னர்ப் பணிந்து சரண்புக்க அச்சுக்கிரீவன், இப்பொழுது பிறவிதீர்ந்து வீட்டரசெய்துமாறு தன்பெருந்தகைத் தமையனல் இராமன்பால் உந்தப்பெற்றும், பணிந்திடாதவனேயாக, பாலகனும் இவ்வங்கதன் தந்தை மனங்குளிர அப்பொழுதே பணிந்துவிட்டான். வள்ளுவர் வேறு கூறினும், தந்தை மகற்கு ஆற்று முதவியிற்பெரியது வாலறிவன் நற்றாள் தொழுவைத்தலே. அவ்வுதவியை ஆற்றியபின் அமைதி நனியடைந்த வாலி ஆவியைவிட்டனன். உயிர் நீங்கியவளவில் கையும் நெகிழ்ந்தது.

கையவ ணெகிழ்த லோடுங்
கடுங்கணை கால வாலி
வெய்யமார் பகத்துட் டங்கா
துருவிமேக் குபர மீப்போய்த்
துய்யநீர்க் கடனுட் டோய்ந்து
தூய்மல ரமரர் சூட்ட
வையன்வெங் விடாத கொற்றத்
தாவம்வந் தடைந்த தன்றே

[அப்பொழுது வாலியின் கைப்பிடி தளர்ந்தவளவில், கடிய அந்த அம்பானது, பகைவர்களுக்கு எமன்போன்ற கொடிய வாலியின் மார்பில் தங்காமல் கழன்று மேலே உயர்ந்து எழுந்துசென்று, பரிசுத்தமான நீரையுடைய கடலில் தோய்ந்து, தேவர்களால் தூய்மையானமலர்மாலைகள் சூட்டப்பெற்று, இராமபிரானது முதுகைவிட்டுப் பிரியாத அம்பறாத்தூணியில் வந்து அடைந்தது]

வாலி யுணர்ந்தபடி இந்தச் சரமன்றிப் பிறிதொரு தருமம் இல்லையாதலின் அமரர்சூட்டிய தூய்மலர்மாலையனைத்தும் அதனிற் கமையும். ஈசுவரன் இச்சையே தருமமாய் நிகழலாகின்றதென்பதை உணர்ந்த வாலி வானுக்கப்புறத்துலகன் ஆனது மமையும். தன் இச்சையே இதுவென்றியம்பாமல் வேறு வேறு விளம்பி அவ்வீசுவரன் இராமநாடகம் நடித்தபரிசு முடிந்த வகையைக்கம்பர்பெருமான்காட்டிய நுண்மையேநம் மனோர் அனைவரும் உய்ந்துகரையேறுவதற்கமையும்; இதனை உணர்ந்தவர்க்கு வாலி வாளா மாய்ந்தவனுக மாட்டான். தன் வெய்ய மார்பகத்துட் டைத்திருந்த பகழியோடும் தன் தம்பி சுக்கிரீவனையும் தன் மைந்தனங்கதனையும் மாத்திரந்தான் மேலொரு பொருளுமில்லா மெய்ப்பொருளுக்கு அடைக்கலமாக்கிய அவ்வாலியோர் கவியரசு; வேறோர் கவியரசு நம் கம்பநாடுடையவள்ளல் அவ்வாலியின் உதாரசீல வழியே பின்பற்றி நம்மனோ ரனைவரையும், கராமலையத் தளர்ந்த கைக்கரியை விராவிஅளித்தருளிய அம்மெய்ப்பொருளுக்கே, அடைக்கலமாக்குகின்றார். வாலியின் இளையவன்போல எண்ணம்மிக்கு வாளாயிருப்பவர் குரக்கினத்தலைவரேயாக ஊழிகாறும் மூழ்கிக்கிடக்கட்டும். மற்று, வணங்கிய அங்கதன் என்ன வணங்கினோர், அப் பரமன் நீட்டிய பொன்னுடைய வாளாம் திப்பியப் பேராற்றலை ஏற்று, மண்ணுலக வைபவங்கள் தருகின்றேன் என்பவரை எல்லாம், அங்கதன் இராவணனை இகழ்ந்ததுபோல், "நாய்தரக் கொள்ளுஞ்சீயம் நல்லரசு" என்று நக்கு, அவனேயென்ன,

"பூதநாயக னீர்சூழ்ந்த புவிக்குநாயக னப்பூமேல் சீதைநாயகன் வேறுள்ள தெய்வநாயக னீசெப்பும் வேதநாயகன் மேனின்ற விதிக்குநாயகன்தான்விட்ட தூதன்யான்" என விளம்பி, எம்பெருமான் இட்ட நற்பணியை நிகழ்த்துகின்ற மெய்வீர புத்திரர்களாய் ஊழியையும் உப்பக்கங்கண்டு வாழ்வாராக.

இராமனுக அவதரித்த அம்முழுமுதற் மெய்ப்பொருள், தான்தன் சித்தத்தால் நிகழ்த்துவது எதுவோ அதுவேதான் நீதியென இங்குக் காட்டியவாறே, பின்னர்க் கண்ணனு யவதரித்தபோதும் காட்டியுள ஒருசிறுகுறிப்பை வில்லிபுத்தூரர்பாரதத்தினுள்ளுங் காணலாம். பதினன்காம்நாள் போரினிடையே, கௌரவர் திறத்துப்பூரிசிவரனும்பாண்டவர் திறத்துச் சாத்தகியும் கைகலந் தருஞ்சமர் திளைக்க அப்பொழுது,

மல்லினின் வென்று வீழ்த்தி
மாயவன் றம்பி தன்னைக்
கொல்லுவான் முனைந்து மற்றைக்
கோமக னடர்த்த னேக்கிக்
கல்லினின் மாரி காத்தோன்
கண்டுவில் விசய னேடுஞ்
சொல்லினன் பகைவன் றன்னைச்
சுடர்முடி துணித்தி யென்றே

[பூரிசிரவன், கண்ணன் தம்பியாகிய சாத்தகியை மல்யுத்தத்தில் வென்று கீழேதள்ளிக் கொல்வதற்குமுயன்று அடர்ப்பதை, இந்திரன் பெய்வித்த கல்மழையைக் கிரியொன்று எந்திக்காத்த கண்ணபிரான் பார்த்து, "அந்தப் பகைவனதுவிளங்குகின்றதலையைத் துணித்துவிடு" என்று அருச்சுலனுக்குச் சொன்னன்.]

கண்ணன் இப்படிக் கட்டளையிட்டானுலும் அருச்சுனன் அதுசெய்ய அஞ்சினன். இருவர் பொருங்கால் வேறொருவன் இடைப்புகுந்து பாணந்தொடுத்தல் அறமன்று. ஆயினும் முன்னரே இன்னபடிவாலியை வதைத்துக் கைநனி பயின்றுள கண்ணன் இப்பொழுது இச்செய்கைக்குக் கூசான். அருச்சுனனை ஏவுவதன் முன் தானே அதனைச் செய்து மிருப்பான். எனினும், "படையெடேன் அமரில்" என்று பணித்துளனுதலின், அச் சொல்லறத்தைத் தான் காக்கும் பொருட்டு அருச்சுனனை வில்லறம் பிறழவைக்கின்ற இது நகைப்பிற்கே இடமாகி நிற்கின்றது. என்செய்வான் விசயன்.

இருவரு முனைந்த போரி
லிளைத்தவற் குதவி யாகப்
பொருவது கடனன் றென்று
போற்றிய விசயன் றன்னை
வெருவர முனைந்து சீறி
மீளவும் விளம்ப மாயன்
திருவுள மறிந்து தெவ்வன்
திண்புயந் துணிய வெய்தான்

[வேறுஇருவர் நெருங்கிச்செய்கின்ற போரில் இளைத்தவனுக்கு உதவியாகப் போரிற்புகுவது நீதி அன்று என்று தருமத்தையேபோற்றிநின்ற அந்த அருச்சுனனை, அச்சம் உண்டாகும்படிகோபித்து "நான் சொன்னபடியேசெய்" என மீண்டும் மாயன் கட்டளையிட, விஜயன் அவனது திருவுளத்தைத்தெரிந்துகொண்டு பகைவனது திண்ணியபுயம் துணிந்து விழும்படி பாணத்தை யெய்தான்]

கடவுளின் தத்துவமனைத்தையும்,தானே அக்கடவுளென்பதையும், தன் வாயாலேயே நேர்முகமாகக் கீதைஉபதேசம் செய்யப்பெற்றிருக்கின்றபார்த்தன் தன் கட்டளையை இப்படித் தடுத்துரைப்பது காண, 'என்னவொரு பார்த்தன் இவன்' என்று கண்ணன் சீறியஇச்சீற்றம் சாலப் பொருத்தமுடையதொன்றேயாம். ஆயினும், அன்னவாறு சீறி மீண்டும் விளம்பியபின்னேனும் மாயவன்றன் திருவுள்ளக் கருத்தை அருச்சுனன் அறிந்துகொண்டு அவன் ஏவியவாறே பகழியெய்ய நேர்ந்ததும் அக்கீதையின் நற்பயனன்றி வேறன்று. இன்னபடி, இருவர்பொர இடையே ஒரு பகழி ஏவவைத்த இது, மன்னறமன்றாயினும், எம்பெருமான் சித்தம் ஆதலால், "பிறிதுவே றளதரோ தருமமே" என்ன அருச்சுனன் அறியப்பெற்றனன் என்று வில்லிபுத்தூரார் ஐயமற எடுத்துக் காட்டுகின்றார். இந்நிகழ்ச்சியை உரைக்குங்கால் இப்புலவர்,தம் முதல்நூலாகிய வியாதபாரதத்தை யல்லாமல் கம்பராமாயணத்தையே கருத்தில்வைத்திருந்தனர்என்ன எண்ணுவது இழுக்காகாது. மல்யுத்தத்தில் சாத்தகியைக் கீழேதள்ளியப்பூரிசிரவன் அவன் சிரத்தினை அரியுமாறு தன் வாளினை உருவுங்கால், அப்போரின் நுணுக்கத்தைக் கண்டு வியந்துஇருந்த அருச்சுனனை நோக்கிக்கண்ணபிரான், "உன்சீடனும் உன்பொருட்டுப் போர்செய்பவனுமாகிய சாத்தகி இப்படி உயிர் துறத்தல் தகாது; ஆதலால் விரைவாகச் செய் (ஆசுகிரியதாம் விபோ)" என்னவும் அர்ச்சுனன், "சுலபமாய்ச் செய்யலாகாத காரியத்தை நான் யாதவன் விஷயத்தில் செய்கிறேன் (ஏஷத் வனுகரம் கர்ம யாதவார்த்தே கரோம் யஹம்) என்று வாளி தொடுத்துப் பூரிசிரவனது புயத்தைத் துணித்துவிட, அப் பூரிசிரவன் அருச்சுனன் செய்தது அறம் அன்று என்று அவனைப் பலவாறு ஏசி, "இந்த அக்கிரமம் ஏன் செய்தாய் என்று தருமபுத்திரன் உன்னைக் கேட்குங்கால் அவனுக்கு நீ என்ன உத்தரம் சொல்வாய்" என்ன இடித்துரைத்தலும், அருச்சுனன், அறத்தின் திறத்தினை நன்குதெரிந்துகொள்ளாதவன் அப்பூரிசிரவனே யென்றும், தன்னை யண்டினவர், சீடர், உறவினர் முதலாயினோரைத் தான் எவ்வாற்றாலுங்காக்கவேண்டியது தனக்கு முற்றிலுந் தருமமே யென்றும் எதிர் விளம்பினன்—என்ன வரைந்துளார் வேதவியாதர். அங்குக் கண்ணன், 'விரைவாகச் செய்' என்ற அளவோடு நிறுத்தியதை இங்கு வில்லிபுத்தூரார், "சுடர் முடி துணித்தி" என்று ஏவலாக மாற்றிக்கொண்டார். அதுவுமன்றி, விஜயன் மறுத்தலும், கண்ணபிரான் வெகுண்டதும், அதன்பின் மாயன் திருவுளமறிந்து இவன் வாளியைத் துறந்ததும் தமிழ்நூலின் தனி யுரிமையாய் நிற்கின்றன. அதன்பின், அருச்சுனன் தான் செய்தது தருமமே என்று வடநூலில் வாதித்தற்கு மாறாக, இத் தமிழ்ப்புலவர், துரியோதனன் கண்ணன்பால் வந்து 'இது நீதியோ' வென்று குறைசாற்றினனென்றும், அதற்குக் கண்ணன்,"வீடுமன் சுவேதனைக் கொன்றவாறும் அபிமன்உங்களாற் கொலையுண்டவாறும் முறையேயோ" என்ன எதிர் விளம்பினனென்றும் வேறாக இச்செய்தியை வகுத்திருக்கின்றனர்.

இன்னபடி, வாலிவதையில் வான்மீகருக்குங் கம்பருக்கும் உள்ள வேற்றுமையே இப் பூரிசிரவன்வதையில் வியாதருக்கும் வில்லிபுத்தூராருக்கும் இருப்பது வியப்பு விளைக்கின்றதாயினும்,இவ்வேற்றுமைஇரண்டும் உள்ளத்தாழ்ந்த தத்துவம் ஒன்றையே கொண்டு நிகழ்ந்திருக்கின்றனவென்பதைஉணர்ந்துகொள்ளல் அருமையன்று. கம்பர் நூலில் இராமன் தக்க விடையொன்றும்வாலிக்கு இயம்பமாட்டாமைபோன்றே, வில்லிபாரதத்தில், "நீங்கள் செய்ததுமாத்திரம் நீதியோ" என்று எதிர் கேட்பதனால் பூரிசிரவனைவதைத்ததும் நீதியன்றென்பதை ஒவ்வினன் போன்றே கண்ணன் உரைக்கின்றானென்பதை உணர்ந்துகொள்ளல் வேண்டும். மற்று இதனை ஏன் அருச்சுனனைக்கொண்டு செய்வித்தான் என்னின், அருச்சுனன் பின்னர் அறிந்துகொண்டபடி — அது அவன் திருவுள்ளம்; அவ்வளவே. "வாலியை வேறு நின்று எவ்விடத் துணிந்தமைந்த தென் கருத்து இது" என்று முன் விளம்பிய இராமனேயன்றோ இங்குப்"பூரிசிரவனது சிரத்தினைத் துணித்தி" என்று ஏவிய இக்கண்ணன்! ஆதலின், அத்திருவுளமே இச்செய்கையைத் தருமமாக்கியது என்று கம்பரைப்போலவே வில்லிபுத்தூராரும் இங்கு நிறுவுகின்றனர் என்ன ஐயமறக்கொள்ளலாம்.

இவ்வாறாக, கடவுள்சித்தம் எதுவோ அன்னதே தருமமும் நீதியும் நன்மையுமாம் என்னுங் கருத்துக் கம்பருக்கும் வில்லிபுத்தூராருக்கும்எட்டியமுறையே போன்று மேனாட்டுச்சிந்தனையாளர்சிலருக்கும் எட்டியுளது. அறுநூறு ஆண்டுகளுக்குமுன் இருந்த பிரான்ஸிஸ்கன் (Franciscan order) வகுப்பைச் சேர்ந்த சிந்தனையாளர்களில் முதன்மையாய் நின்ற Duns Scotus, William of Occam முதலியவர் பலர்,நன்மை என்பதை உண்மைக்கும் மேலாகப் பாராட்டி, கடவுள்சித்தம்எதுவோ அதுவே நன்மையெனப்படும் என்றும், இயற்கையிலேயே நன்மைகளாக விருப்பவைகளைத்தாம் கடவுளும் விதித்தார் என்று கொள்ளாமல், கடவுள்விதித்தபடியினாற்றான் அவை நன்மையெனத்தக்கனவாயின வென்று நாம் கொள்ளல் வேண்டுமென் றும்வற்புறுத்தியிருப்பவைகளை இச் செவ்வியில் மனத்துட்கொள்ளல், வாலிவதையின் தத்துவத்தை ஆராய்ந்து அறிந்து அடங்க முயல்வோர்க்கு நல்ல பேருதவியாய் நிற்கவல்லது.

வாலிவதைப்படலம் முற்றிற்று.

சூளாமணி

[666-வது பக்கத் தொடர்ச்சி]

இரதநூபுரச் சருக்கம்

32. அழகும் இன்பமும்அறிவொளியும்ஒருங்கே திரண்டு மல்லிகை வடிவாகப் பூக்க, முகிழ்முகிழ்த்தும் அரும்பியும் அலர்ந்தும் மலர்ந்தும் நிற்கின்ற அவற்றைக்கொண்டு ஒரு மாலை தொடுத்தாற்போல, கண்ணும் வாயும் மூக்கும் காதும் நெற்றியும் கழுத்தும், இருகையுங்காலும் விரல்களும்உகிர்களும், சிறுமல்லிகையும் பெருமல்லிகையுமாக விளங்கி ஒன்றாக இனிது இயைந்து அழகும் இன்பமும் ஒளியும் வீசி நிற்ப, தானே ஒளிரும் தன்னொளியாள் குழவியாக மின்னிப் பொலிகின்றாள். ஸ்வயம்ப்ரபா என்பதே அன்னவள் பெயர். பொன்மரமாம் கற்பகத்தே சுற்றிநின்று நினைத்தவற்றை நினைத்தவர்க்கு நினைத்தபடியேகொடுத்தருளும்பொற்கொடியாம் காமவல்லியும், இவ்வாறு இந்தச் சயம்பவைபோல மாறா இளமையின்பமும், தனக்கென வாழாப் பிறர்க்குரியாளராம் பெருந்தகைமையைச்சுட்டும் தூய வெண்ணிற அழகொளியும்,கொண்டுவிளங்க மிகமிக விரும்புகின்றது. அவ்வாறு அப் பொற்கொடியும் விரும்ப, அந்தப் பொன்னுலகிற்கும் ஒரு உயர்ந்த குறிக்கோளை நினைப்பூட்டிக்கொண்டு தோன்றுகின்றாள் இந்தப்பெண் கொடி. (நினைக்கின்ற நினைப்பெல்லாம் ஈடேறாது நிலைகுலைவது ஒருலகம். அது நம்முடைய மண்ணுலகம். அவை நிறைவேறும் உலகம் ஒன்று உண்டு. வேண்டிய வேண்டியாங்கெய்தும் திண்ணியர் வாழும் உலகமே பொன்னுலகு. அஃதேனும் முடிந்தமுடிபு ஆகுமோ? தினவெடுக்கின்றது, சொரிகின்றான்; புண்ணாகின்றது, மேலும் சொரிகின்றான். இப்படியே "இது வேண்டும் அதுவேண்டும்" என்ற தினவெடுக்கின்றது; அது கிடைத்தால் முன் எண்ணிப் புண்பட்ட மனம் வேறொன்றை நாடுகின்றது."ஆசைக்கோ ரளவில்லை அண்டமெல்லாம் கட்டியாளுகினும்" என்பது பெரியோர் கண்ட முடிவு. அவாவைப்பெருக்கி நம்முடைய வாழ்க்கைத்திட்டத்தை உயர்த்தவேண்டும் என்ற மேனாட்டுப் பொருள்நூலின் முடிபு, நம்மை இன்று,நச்சுப்புகைக்காற்றினிடையே,செங்குருதி வெள்ளத்தில் மீன்களாக்கி,சிறுமீனைப் பெருமீன் தின்பதுபோல ஒருவரை ஒருவர் பிடுங்கித் தின்னும் ஆள்விழுங்கிகளாய் அலையும்அலைச்சலால்நரம்புதளர்ந்து தூங்கிக்கொண்டே ஓயாது ஓடி முட்டிக்கொள்ளும் வெறியாட்டத்தே கொண்டு ஆட்டி வைக்கின்றது. இவ்வெறியாட்டத்தில் தோற்றவரே மண்ணுலகத்தவர்; வென்றவரே பொன்னுலகத்தவர். எனினும் எல்லாம்வெறியாட்டுத்தானே. இதனினும் மிக்கதாகிய அறிவாட்டம் ஒன்று இருத்தல்வேண்டும். கொடுக்கும்கொடிஒருபுறமும்கொள்ளும்மிடியோன் மறுபுறமுமாக இருக்கின்ற உலகம் ஏழை யுலகமேயாகும். தனக்கென வாழாப் பிறர்க்குரியாளர்கள், என்பும் பிறர்க்கே யுரியோராய் அருளொளி பரப்பி அனைவரோடும் ஒன்றாகி இயைந்துவிடுகின்ற உலகம் ஒன்றுஉண்டு. மன்னுயிரை எல்லாம் தன்னுயிராகப் பாவித்து வாழ்கின்ற உலகமேயாம் அவ்வுலகம். இருளால கொன்று; பொருளால கொன்று; அருளால கொன்று; பொற் கொடியின் பொன்மலர் செல்வச் செருக்கைக்காட்டுவதல்லாமல், உண்மையான நறுமலரின் உயர்வைக் காட்டுமோ? அப் பொன்மலரே நாற்றமுடைத்தானாற்போல அருளுலகில் இன்ப வெள்ளம் புரளும். பொன்னுலக வாழ்க்கையின் நுட்பத்தைக் காமவல்லியாக ஓவியம் எழுதிக் காட்டியிருக்கின்றார் தோலாமொழித் தேவர். அருளுலக வாழ்க்கையை அம் நகைத்தாம மல்லிகை மாலை என்ற மறைமொழிகூறி உயிர்கொடுத் தொரு அழகிய குழவியாக நம்எதிரே தவழவிடுகின்றார். மல்லிகைமாலையோ அதனை வேண்டுவாரினும் வேறேநின்றொளிர்வதில்லை. அவர்கள் கழுத்திலோ மார்பிலோ புகுந்து அழகுக்கு அழகுசெய்கிறது. அவர்களோடு ஒன்றாகியதும் உவகை வெள்ளம் புரளச்செய்கின்றது. மாலை யணிவார் ஒருவரே யாயினும் அதனுடைய மணமும் அழகும் கண்டு களித்து உயர்நிலையடைவார் சுற்றி நிற்பவர் அனைவருமே யன்றோ. சயம்பவையாம் பெண்மணி ஒரு மணாளனுக்குத் தன் பெண்மையைத் தந்துதவி நிற்பினும் அவளுடைய அருளும் அறிவும் வெள்ளமாகப்பொங்க அதிலே இவ்வுலகம் முழுவதும் முழுகிக்குளித்துத் திளைக்கு மன்றோ? ஈவாரும் ஏற்பாரும் இல்லை. வீணான வேட்கைகள் இல்லை. அழகுண்டு; அப் பேரின்பத்தே விளைந்த நகையுண்டு; உவகையிற் பூத்த அறிவொளி உண்டு. கடவுண் மணமாய் அனைவர்க்கு மின்ப மூட்டும் அருளுண்டு. தானெனத் தனித்து நில்லாமல் இயற்கையொடு இயைந்து நின்று அன்பு நாரால் எல்லாவற்றையும் ஒன்றுகோத்து அழகுக்கழகுசெய்யவேண்டித் தன்னிழலிலே தளிர்கள்விட்டுத் தனியொளி படரும் திரு மாலையாம் கடவுணிலையும் உண்டு.) பயாபதியின் புதல்வர்கள் அமரர் உலகிலிருந்து இழிந்துவந்ததுபோல இவளும் தனக்கென இன்பந் துய்க்கும் பொன்னுலகின்நின்றும் இழிந்து வந்து பிறர்க்கென இன்பமூட்டும் இவ்வுலகின்கண் தோன்றுகின்றாள். தந்தையின் பண்புகள் அனைத்தும் இவளிடத்தே பழுத்து நிற்கின்றன. அச்சமுடனே நன்மையும் ஒளியும் கொண்டு விளங்குகின்ற வேலையேந்திய அவ்வரசன் ஆண்மக்களிற் சிறந்து ஒளிர்கின்றான். அவனுக்கு அவனுடைய பண்புகளே ஒரு குழவியாகத் தோன்றியது போல, பெண்களில் தலைசிறந்தாளாக இவள் தோன்றுகின்றாள். "தக்கார் தகவிலர் என்பது அவர் அவர் எச்சத்தாற் காணப்படும்" என்னுமது வள்ளுவர் கண்ட வுண்மை. அதனைத் தேவரும் காண்கின்றார். தாயொருபாலும் தந்தை யொருபுறமும் குழந்தை ஒருசாரும் வாழலாகின்ற இந்த நாளிலும் "மகனறிவுதந்தையறிவு" என்பது பொய்க்கவில்லையே? தோலாமொழித்தேவர் இங்கு முற்பிறப்பைக் குறிப்பதிலும் ஒரு கருத்துண்டு. காமவல்லிக்கும்அந்நகைத் தாம மல்லிகைமாலைக்கும்உள்ள வேற்றுமையைப் பின்னும் வற்புறுத்தி,முன்னைய பிறவியினும் சிறந்ததொரு பிறவிபெறுகின்றாள்,எனக்காட்டி "அம்மல்லிகை அரும்பிப் பூக்கத்தக்க தொரு சிறந்த விளைநிலமும்கிடைத்ததே" எனவியந்து "நம்பி நங்கையாத்தோன்றினாள்" எனப் பாராட்டுகின்றார்.

"நம்பி நங்கையா" என்பதற்குத் 'திவிட்டனுக்கு ஏற்றநங்கை'என்று பொருள் கூறுவர். "அருக்கனேர்த்

திக்குத் தங்கையாக'' என்றும் பொருள் கூறுவர். இச்சூளாமணி கூறும் வரலாறு ஸ்ரீ புராணத்தில் கூறப்படுகின்றது. அங்கே "அருக்ககீர்த்தி குமாரனுடைய இளையாள் ஸ்வயம்ப்ரபை'' என்றுகூறப்படுகின்றது. எனவே "அருக்ககீர்த்திக்குத் தங்கை'' என்றபொருளே சிறந்ததென்பர். ஆனால் மணிப்ரவாள நடையில் உள்ள ஸ்ரீ புராணத்தையே இருப்பது இருப்பதுபடி பாட்டாகப் பாடுகின்றார் தேவர் எனச் சொல்வதற்கில்லை. எனினும் அந்நூலுக்கும் இந்நூலுக்குமுள்ள ஒற்றுமையைக் காட்டவேண்டி ஆங்காங்கே ஸ்ரீபுராணப்பகுதியையும் எடுத்தெழுதுவதும் நல்லதேயாம். ஆதலின், இங்கே இதுவரை கூறிய பகுதியை எடுத்தெழுதுவோம்.

"விசாகநந்தி தீர்க்ககாலம் ஸம்ஸார சக்ரத்திலே பரிப்ரமித்து, இஹ விஜயார்த்த பர்வதத்து உத்தர ஶ்ரேணியில் அளகாபுரத்து வித்யாதர ராஜா மயூரக்ரீவன், தேவீ நீலாஞ்ஜனை: இவர்கட்குப் புத்ரன் அஶ்வக்ரீவன்என்பானாகி ப்ரதிவாஸுதேவனாயினன்; அப்ரதிசக்ரவிக்ரமத்தனாகிய இவன் அர்த்தசக்கரவர்த்தி ஸாம்ராஜ்யபதம் எய்திச்செல்கின்றனன். (பின்வரும் கதை)

"மஹா சுக்ரகல்பஸ்தராகிய தேவர்கள் ஷோடஶ ஸாகரோபம காலம் திவ்யஸுக மநுபவித்த பின் இஹ (இங்கே) ஸுரம்ய விஷய (தேசம்) பௌதநபுரத்துப் பாஹுபலி ஸந்தானத்து வந்த ராஜா ப்ரஜாபதிமஹாராஜன்; தேவிமார் ஜயவதியும் ம்ருகாவதியும்என இருவர். விஶாகபூதியாகிய தேவன் ஜயவதி பக்கல் விஜயன் என்னும் புத்ரனாகிப் பலதேவனாயினன்; விஶ்வநந்தியாகிய தேவன் ம்ருகாவதி பக்கல் த்ரிப்ருஷ்டன் என்னும் புத்ரனாகி வாஸுதேவனாயினன். ராமகேஶவராகிய இவர்களது தவள நீல வர்ணத்ததாகிய திவ்ய தேஹோத்ஸேதம் எண்பது வில்லு. இவர்கள் பரமாயுஷ்யம் எண்பத்துநான்கு நூறாயிரம் ஸம்வத்ஸரம்.

"இப்பால், விஜயார்த்த பர்வத தக்ஷிணஶ்ரேணியில் ரதநூபுர சக்ரவாளநகரத்து நமிஸந்தானத்து வித்யாதர ராஜா ஜ்வலநஜடி மஹாராஜன்; தேவி திலகபுரத்துச் சந்த்ராப வித்யாதர ராஜாவினுக்கும் ஸுபத்ராதேவிக்கும்புத்ரியாகிய வாயுவேகை; இவர்கட்குப்புத்திரி அருக்ககீர்த்தி குமாரனுக்கு இளையாள் ஸ்வயம்ப்ரபை. ஸர்வாங்கோபாங்க ஸுந்தரியாகிய இவள் மதநபதாகைபோல வளர்ந்து ஸம்பூர்ண யௌவனாவஸ்தையளாகியபின், ஒரு நாள் ஜ்வலநஜடி மஹாராஜன் மநோஹரோத்யாநத்து எழுந்தருளியிருந்த ஜகந்நந்தர் அபிநந்தர் என்னும் சாரணமுனிகள் பார்ஶ்வத்தே பரிக்ருஹீத ஸம்யக் தர்ஶன ஜ்ஞாநஶீல பூஜோபவாஸாதி பராயணனாயினன்''

என்பதுவரை இப்பொழுது போதும். இம்மட்டுமே எத்துணை மாறுதல். ஈதனைத்தும் ஒரு பெயர் முறை. சூளாமணியோ பாட்டு. அம்மட்டுமா! காமக்கொடி மல்லிகைமாலையானதை என்னென்று புகழ்வது இது நிற்க. "நம்பிநங்கையா - ஏமகல் லுகத்தினிழிந்து'' என்பதற்குத் 'தாயும் தந்தையுமா யிணைந்த அவர்கள் கருவாம் இன்பவுலகில் வளர்ந்து உலகில் தோன்றினாள்'' என்றும் பொருள் கூறுவர். நிற்க.

33. இத்தகைய கடவுண்மாலை தோன்றினால் கை எடுத்துக் கும்பிட வேண்டாவா? தோலா மொழித் தேவர்தம் எதிரே அவ் வருள்மாலையை எல்லோரும் கைதொழுது நிற்கின்றனர். செக்கச் சிவந்த செவ்வானம் மேற்கே அழகாக ஒளிர்கின்றது. அன்றுதான் அரும்புவிடும் வெண்மலர்போல அமுதமாகி அமுதமூட்டும் பச்சிளம் பிறைத்திங்கள் கீற்றளவில் திகழ்கின்றது வெண்ணிலவைப் பொழிகிறது. வான்யாறு மிகவெள்ளியதாய் வானகத்தே ஓடுகின்றதாம். அதிலிருந்து தெறித்த நீரோ என்ன அவ்வெண்கதிர்கள் பொலிகின்றன. இவ் வியற்கையழகைக் கண்டவர்களனைவரும் கடவுள் அருளே மின்னுகின்றதென்னக் கையெடுத்துத் தொழுகின்றனர் அன்றோ? திங்களுக்கெனக் கூப்பியகை செக்கர்வானையும் கும்பிடுகின்றதன்றோ? அங்ஙனமே, அழகும் (மடம்) அன்புமே (மாதர்) சிறப்பியல்புகளாகக் கொண்டு பெண்களிற் சிறந்தாளாய் ஒளிரும் இந்நங்கை பெண்ணாகப் பிறந்ததும், எல்லோரும் மேலே சுட்டிய அருட் பெருந்தகைமையை மனத்தில் எண்ணி இவளெதிரே கை கூப்பி நிற்கின்றனர். அந்தக்கும்பீடு பெண்பிறவிக்கும் போய்ச் சேர்கின்றதன்றோ? இந்தத்தொழுகை ஒருமுறை இருமுறை நிகழ்கின்ற தொன்றன்றே. பயின்றதொரு வழக்கமாகி நடமாடுகின்றது என்பதைச் சுட்டத் 'தொழுப்பாடு நவின்றதே'' எனக் கூத்தாடுகின்றார் தேவர். "பெண்பிறப்புப் பேய்பிறப்பே பார்'' என்று இகழ்வாரும் வாய்மூடி இப் பெண்பிறவியினெதிரே தொழுது நிற்கின்றனர். இக்குழந்தையை நம் எதிரே வளரவிடுகின்றார் தோலாமொழித்தேவர். மேலே மல்லிகை மாலை என்றனர். இங்கே கதிரிளந் திங்கள் என்கின்றார். மேலே மேலே வளருந் தன்மையினையும், வாடா இளமையினையும், அழகொளியினையும் இயற்கையொடு பொருந்தி நிற்கும் இயைபினையும், பிறர்க்கென ஒளிவீசி இருளகற்றும் பெருமையினையும் இவ்வுவமை நன்குசுட்டி நம்மை உவகைக் கடலில் முழுத்துகின்றது 'குழந்தையும் கடவுளும் கொண்டாடும் இடத்திலே' என்பது பழமொழி. இத்தகைய குழந்தையைப் பலரும் கூடிக் கொண்டாடிச் சீராட்டிப் பாராட்டுவதை மிக அழகாக இப்பாட்டில் தேவர் பெரியதொருகருத்தை உள்ளடக்கிப் புனைந்துரைத்துள்ளார்.

34. பெரியாழ்வார், யசோதையின் கண்கொண்டு, குழந்தையாம் கண்ணனைக் காண்கின்றகாட்சி பழகிய பாடல் காதில் ஒலிக்கின்றது.—

செங்கமலப் பூவில் தேனுண்ணும் வண்டேபோல்
பங்கிகள் வந்துஉன் பவளவாய் மொய்ப்ப
(பங்கி - தலைமயிர்)

இத்தகைய காட்சியைத் தோலாமொழித்தேவரும் இங்கேகாண்கிறார். ஸ்வயம்ப்ரபை வளர்பிறைபோல வளர்கின்றாள். தளர்நடை நடக்கின்றாள். நம் நாட்டு வழக்கப்படி குழந்தைக்குக் காது குத்துகின்றனர். காதுகள் வீங்கி எரியாமே திரியைக் காதுக்கிட்டுக் கண்ணுக்கு நன்று மழகு முடைய கனகக் கடிப்பும் இட்டு அக் காதுகள் தூராமே வளர்த்து இதுபோது குண்டல மணிகின்றார்கள். நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளரும் இச்செல்வக் குழவியின் திருமுகம் மின்னிப் பொலிகின்றது. செந்தாமரைப்பூவே போலத் திகழ்கின்றது. தலைமயிரும் வளர்ந்துவருகின்றது. முடி கூடவில்லை. நடக்கின்றபோது கறுத்துச்சுருண்டொளிரும் குறமயிர்நிரைகள் அத்தாமரைமுகத்தைச்சுற்றிலும் வந்தும் எழுந்தும் வந்தும் எழுந்தும் வீழ்கின்றன. வாள்முகமெனும் மலரிலே தேனுண்ண வந்துவீழும் வண்டுகளே போலத் தோன்றுகின்றன அந்தச்சுருள்கள்.

இக்குழவியினை நினைக்குந்தோறும் குளிர்ந்த நீரினிடைத் தோன்றும் பொருள்களே நினைப்பிற்குவருகின்றன. வாண்முகம் தாமரையாகி வளர்கின்றமை கண்டோம். கண்களோ வாடா இளமையை இன்பமாய் உருக்கி அழகொளியாய் வார்த்தெடுத்துத் தாவிப் பிறழ்கின்றன. நீரிலே திளைத்துக் களித்து அருகே நின்ற மலர்மீது தாவிக் குதிக்கும் கெண்டை மீன்களே போல விளங்குகின்றன அக்கண்கள். வானவில்லின் நிழல் அந்த நீரிலே தோன்றி அழகிடையே அழகாகவொளிர்கின்றது. அவ் வில்லேபோலப் புருவம் வளைந்து பொலிகிறது. "உண்டோ இல்லையோ'' என்று கண்டவர்கள் அனைவரும் ஐயப்பட்டு வியந்து நிற்கும்படியாக இவ்விளம்பெண்ணிற்கு இடை சிறுத்து அழகு நனி செய்கின்றது. பேயோடு நம்மைக் கூத்தாடவைக்கின்ற பெருவயிற்றைக் குழந்தையிடமும் காண வஞ்சுகின்றார் தோலாமொழித்தேவர். குழவிநிலையில் இயற்கையாக வயிறு பெருத்தே நிற்கும். ஆதலினால், ஐயத்தை எழுப்பும் இடை குழவிநிலை மாறியபின்னே தான் அழகாவது. பேதைக்கும் பெதும்பைக்கும் இடை நிற்கின்றாள் என்க. இவ்வாறு குறிப்பாக இப்பெண்கொடியின் வளர்ச்சியைச் சுட்டிப்போகும் நம் தோலாமொழித்தேவர் பாவன்மை பாராட்டத் தக்கதன்றோ?

35. இவ்விளம்பெண்ணிடத்தே அறிவுமுகிழ்த்து மலர்வதைக்கண்டு ஈடுபடுகின்றார் தேவர். எதிரே ஒரு அழகிய பூவொன்று இப்போது மலர்கின்ற நிலையில் ஒளிர்கின்றது. அதனழகிலே ஈடுபட்டுத் தன்முகமெலாம்கொண்டு ஆராய்ந்து நிற்கின்றாள் இந்தச் சயம்பவை. அதன்நிறத்தைக்கண்டும், மணத்தை முகர்ந்தும் அதன் தேனைக்கண்டு நாவிலே நீரூற நின்றும், மெத்தென்ற அப்பூவினருகே தனது முகத்தைக்கொண்டு சென்றுதடவித் தன்னைமறந்தும், அதிலே ஒலிக்கும் வண்டுகளின் இசையைக் கேட்டும் ஆராய்ந்து நிற்கின்றாள். "இம்மணத்தைஇதிற் கலந்தார் யார்? இந்நிறத்தை இனிதேபூசினார்யார்? இதனைஇப்படிமெத்தென இழைத்தார் யார்? இதிலேதேனினைஇவ்வாறு சொரிந்துவைத்தார்யார்?'' என்றென்றெல்லாம்கூர்ந்தெண்ணிப் பார்க்கின்றாள். ஒருதாய் பிள்ளைபெறும்போது உடலெலாம் குலுங்கி நிற்பதுபோல, அறிவு எனும் பிள்ளை பெறும்போதும் மக்களுக்கு உடலம் முறுகி நிற்கும். கூர்ந்தெண்ணும்போது புருவம் நெறிந்திருப்பதும் இயல்பல்லவா! இச்சிறுமியும் இயற்கையினுள்ளே ஒளிரும் மறைபொருளைக்காண முற்பட்டபோது புருவம் ஒசிந்து நெற்றிநெறிய நிற்கின்றாள். இவ்வாறு இவள் அறிவுப்பிள்ளை பெறுவதனை அனைவர்க்குங் காட்டி மகிழ்கின்றார் நம் தோலாமொழித்தேவர். புருவக்கொடி நொசிந்திருக்கின்றது: புருவங்கள் நோவுபடுகின்றனவா? நோவுபடுவனபோல் தோன்றுகின்றன அந்நிலைமையில்; அதனால் அன்றோ பிள்ளைப்பேறு என்றோம் நாமும். காதிலே கற்பகப் பூங்கொத்தை அணிந்து மிளிர்கின்றாள். அப்பூங்கொத்தினுள்ள தேனையும் மலர்ப் பொடியையும் ஊதியுண்கின்ற தேன்வண்டு, தேனில்மயங்கி இன்னும் உள்ளே உள்ளவற்றையும் உறிஞ வேண்டித் தன் இறகையூன்றி நிற்கின்றது. இன்னவாறு ஊன்றுந்தோறும் இவளுடைய புருவம் நொந்து நொசிகின்றதுபோலும். பலமுறையும் நெறிகின்றதென்றதால் 'அச்சிறுமி ஒவ்வொன்றாகவே எண்ணுகின்றாள்; சில விளங்கியதும் மேலும் பிறவற்றை ஆராய்கின்றாள்' என்பதாயிற்று. அறிவுவிளக்கத் தெழும் நொசிதலைப் புனைந்துரைக்க வேண்டி, வண்டின் ஊன்றலால் எழுகின்ற நோவின் பயன் என்னத் தற்குறிப்பேற்றமாகப் புனைந்துரைக்கின்ற அழகை அறிவுப்பிள்ளைபெற்ற தோலாமொழித்தேவரைப் போன்றாரே அறிந்து துய்த்தல்கூடும்.

நம்மாழ்வார் வைபவம்

திருவாய்மொழி

[686-வது பக்கத் தொடர்ச்சி]

7-ம் பத்து, 1-ம் தசகம்.

1-ம் பாசுரம்.

உண்ணிலாவிய வைவராற்குமை
தீற்றி யென்னையுன் பாதபங்கயம்
நண்ணிலா வகையே நலிவா னின்ன
மெண்ணுகின்றாய்
எண்ணிலாப்பெரு மாயனேயிமை
யோர்களேத்து முலகமூன்றுடை
யண்ணலே யமுதே யப்பனே
யென்னை யாள்வானே.

அவதாரிகை:—ஸர்வஞ்ஞனாய்ச் சாமர்த்தியசாலியாய் ஸஹஜஸுகிருத்தாய், பரமகாருணியவானாய் நிற்கின்றதிருவேங்கடமுடையான் ஸந்நதியில் ஆழ்வார் அவன் திருவடிகளிலடைக்கலம்புகுந்ததைச் சென்றதசகமுடிவில் கண்டோம். ஆத்மரக்ஷாபாரத்தை நிவர்த்தித்துக்கொண்டவர் சாந்தமனப் பிரவர்த்தியுடையவராயிருத்தலே வேண்டியிருக்க, இப்பாசுரத்தில், இன்னமும் தாம் பஞ்சேந்திரியங்களின் நடுவில் அகப்பட்டிருப்பது போலவும், அவைகளை அவன் ஒழித்துத்தராமலிருப்பதைக் கண்டு தம்மை உபேக்ஷித்தானென அஞ்சுவதுபோலவும் பாவித்து, "நீ இவற்றை அனுப்பி என்னை ஹிம்ஸித்து உன் திருவடிகளில் சேராதபடி பண்ணுகிறாய்! இத்தால் உனக்கு என்ன பிரயோஜனம்? பரமகாருணிகனே! இவற்றினின்றும் உன் திருவடிகளில் வாங்கியருளா'' யென்னப் பகவானைக் குற்றம்சாட்டிக் குறைகூறி நோவுபடுகிறார். இதற்குக் காரணமுண்டோவென்று ஆராயுமிடத்தில்:... இவரது அந்தக்கரணமும் இந்திரியங்களும்பகவான் இடத்தில் ஈடுபட்டிருப்பதால் நோவுபடுவதற்கு யாதொருஹேதுவுமில்லையாயினும் பண்டையகாலத்தில் அவைகள் இவர் பகவானையநுபவிப்பதற்கு விரோதியாய்நின்றமையா லினியுந் தடையாய்நிற்குமோவென்ற சங்கைபற்றி வருத்தப்படுகின்றாரென்றுநாம் அறியவேண்டும். இவர்தாமே "முடியானே'' என்கின்ற தசகத்தில் தம்முடைஒவ்வொருஇந்திரியமும்மற்றொரு இந்திரியத்தின் காரியத்தையும் தான் செய்து பகவானைத் தானும் மற்றதைப்போல் அநுபவிக்கவேண்டும் என்று ஆசைப்படுகிறதாகவல்லவோகூறினார். இதற்குமுன்னும் தற்காலத்திலும் எதிர்காலத்திலும் இவை

கள் பகவானையநுபவிக்கத் தடைசெய்யுமென்ற சங்கை திருவுள்ளத்தில் உதிக்கவே, சர்ப்பத்தை யருகில் கண்டவர் தம்மைத் தீண்டுமோவென்று பயப்படுவார் போல்,இந்திரியங்களின்சேஷ்டிதங்கள் தன்னைப் பிடிக்குமென்று அஞ்சுகிறார்.புத்தினருகே பழுதைகிடந்தால்பயந்தானே!மேலும் பகவானிவ்விந்திரியங்களுக்குக்கோசரமில்லாதவன்,அவற்றாலறியவல்லனல்லன். இவற்றினுபயோகமில்லாமையால் வீணாக இவைகளைச்சுமப்பது ஆநாவசியகமென்றும்திருவுள்ளமாயிருக்கலாம். பின் 10-ம்பத்தில்,பிருகிருதி-ஜட ஸம்பந்தம் அவனோடுகலக்கத்தகவில்லாததென்று ஆழ்வாரே பகவானுக்கு விண்ணப்பஞ் செய்கிறார். இது எப்படியாயினும்பகவான், ஆழ்வார் திருவுடம்பிலேறியசோதைப்பிராட்டியிடத்துக் கண்ணபிரானைப்போல்,சிறுகுழவியாய் அவரது இடுப்பு ஒக்கலையிலும் கழுத்துக்கவட்டிலும் சிரவிலும் விளையாட்டுக்கண்டானென்றிவ்வாழ்வாரேபின்னர் அருளிச்செய்கின்றார்.ஆச்ரித வாத்ஸல்லியத்தால் பராதீனமாகும் ஸர்வ சுலபன் பரமேசுவரன் ஆனாலும் ஆழ்வாரை மெய்தொட்டுத் தீண்டியநுபவித்தவன் அவர் திருவுடம்பில்(லோபம்) ஆசைகொண்டு அதைத் தவிர்த்தருள மனம் இசையவில்லையென்று ஆறாயிரப்படி உரையாசிரியர் கூறினால் அதுஅவனுக்குக் குறைவாகுமோ? ஆழ்வார் பிருகிருதி ஸம்பந்தத்தைத் தவிர்த்தருளவேண்டுமென்று பகவான் தம்திருவுடம்பில் உள்ளஆசையை "மங்கவொட்டு" அதாவது 'நசிப்பி' என்று 10ம்பத்தில் பிரார்த்திப்பதுகருதத்தக்கது. மேலும் மேல்படி உரையாசிரியர், ஆழ்வாரைக்கொண்டேபகவான்உலகஹிதத்தின் பொருட்டுஇத்திருவாய்மொழியை முடித்துவைக்கக் கருதினமையால்அவரை உடனே அவர் தம் வேண்டுகோளின்படிகூவிக்கொண்டுஅவரது பிருகிருதி ஸம்பந்தத்தைத்தவிர்த்தருளவில்லைஎன்கிறார்.இவ்வுண்மையை ஈட்டுஉரையாசான்,"பகவான் காரியங்கொள்ளக் காரியம் (தன்னாலேயே செய்து முடிக்க வல்லதைச்) செய்திலன்"என்று,நாம் ஞாபகத்தில் வைக்கும்படி பிராஸமிட்டுரைத்தார். ஜகதீசன் உள்கருத்தை உலக உபகாரமாக்கவே இவ்வுலகத்தில்ஆழ்வாரைவைத்தானென்று "நமக்காக (உலகில்) இருக்கிறபின்பு அவர் (ஆழ்வார்) இங்கிருந்தால் நல்லதென்றுஇருந்தான்" என்றுஉரைக்கின்றார். அவன் மதிநலமருளினதைப் "பண்ணிக்கொடுத்த ஞானலாபம் இவர்க்கு (உலகவுபகாரத்துக்கு) தீருகைக்கு உடலென் றிருந்தான் அவன்," "அதுதானே துவரைக்கு அவசரப்படுவதற்கு உடலாயிற்றிவர்க்கு" என்பது ஈடு. ஆழ்வார் 'ஸ்வகருமத்தால் வந்தநோவை அவன் நலிகிறானென்று சொல்லலாம்படியல்லவோ (பரஸ்பர) ஸம்பந்தமிருப்பது." ஆழ்வாரின் "இழவு அவனாலேயென்று சொல்லத் தட்டில்லை." ஆழ்வார் நோவுபடும் மனோநிலையை "இந்திரியங்களுக்குச் சுருக்கத்தில் இரையாக்கிப் புகட்டநினைத்தான் இத்தனை" என்கிறது ஈட்டு உரை.

உரை:—எண்ணிலா - ஒன்றிரண்டுமுதலாக எண்ணிக்கணக்கிடக்கூடாத,பெரு-பெரிதான, மாயனே- விசித்திரமானசக்திகளும் குணங்களும்உள்ளவனே! (அவை) சர்வஞ்ஞத்வம் சாமர்த்தியம் ஔதாரியத்துவம் பரம காருணிகத்துவம்முதலியன;இவைகளெல்லாம்தமக்குஉதவவேண்டியிருக்க அதற்குமாறாகஇந்திரியங்களையும் கரணகளேபரங்களையு மிட்டு நலிவுசெய்யஏற்பட்டானேஎன்று சோகிக்கிறபடி.இமையோர்களேத்தும் உலகம் மூன்றுடையாய்- நித்தியவிபூதியிலுள்ள மஹாபக்தர்கள் அளவற்ற அவனது குணாதிசயங்களை எப்போது மநுபவிப்பதால் ஏவாமல் துதிசெய்துகொண்டிருக்கிறார்களென்பது திருவுள்ளம். உன் திருவடிகளைவிட் டகன்றால் ஆற்றி ஸஹிக்கமாட்டாதவென்னைப்போன்றவரை இந்திரியங்களை இட்டு நலிவுசெய்விக்கின்ற விந்தப்பெருங் குணத்தை ஏத்துகைக்கு உனக்கொரு விபூதிஉண்டாயிருக்கவேஎன்னைக் கடாக்ஷிக்கச்சமயமுண்டோவென்றுகோபத்தால் சாற்றுகிறபடி. சேதநாசேதநபிருகிருதிமுதலான ஐசுவரியங்களையுடையவனாய,அண்ணலே -பிரபுவே, ஸ்வாமியாயிருப்பவன்ரக்ஷிப்பானென்றுஊர்ஜிதநம்பிக்கையுடைய என்னை நலியப்பார்க்கின்றாயென்று கருத்து. அமுதே - நீ என்னை என்ன செய்தாலும் எனக்கு எப்போழ்தும் உகப்பாயிருப்பவனே, என்னை யாள்வானே - உன் பிரயோஜநத்துக்காகவே உனக்குஆள் செய்வதற்காக அமர்ந்தமைந்த என் வேண்டுகோளை உபேக்ஷித்தாயென்று குறைகூறுகிறபடி. அப்பனே - தந்தைபோல் உபகரிக்கின்றவனே, உள் - என் சரீரத்தின் அகத்து, நிலாவிய - தப்பவொண்ணாதபடி அகப்படுத்தி நடத்துகிற - எனக்கு நீ அனாவசியமாய்த் தேஹத்தோடு இந்தரியங்களைச்சேர்த்து என்நலிவுகாண ஏற்படுத்தியிருக்கிறாயென்று தொனி. ஐவரால் - பஞ்சேந்திரயங்களால், குரூரப்படைகளாக நிரூபித்து ஆளாக்குகிறபடி, ஒன்றிரண்டு பகைவரானல் தப்பி ஓடலாமென்பது கருத்து. இன்னும்-ஆழ்வார் தமக்குப் பக்திபக்குவமடைய முன்னர்ப்போல இப்போழ்தும் எதிர்காலத்திலும், குமை - பீடையை, அதாவது அநிஷ்டபலத்தை, தீற்றி - தின்னச்செய்து, அதாவது அநுபவிக்கவாக்கி, ஆழ்வாரின் திருவுள்ளத்தில் தம் நிலைமையைத்தாழ்த்தி வற்புறுத்துவதில் இதுவேமுக்கியமானது, வெறுப்புக்கும் மனஸ்தாபத்திற்கும் நிந்தைக்கும் இதுவே அடி - பகவான் இந்திரியங்களின் கொடுமைக்கு ஸஹாயகாரியாய் நிற்கிறானென்றுஎண்ணமிட்டபடி; உன் பாதபங்கயம் - உனது திருவடித் தாமரைகளை,நண்ணிலா வகையே- கிட்டாதபடி, நலிவான ஹிம்ஸையே செய்யக்கடவனாய்-ஆசைப்படும் பலத்தைத் தவிர்த்தொழிவித்தால் அதுவே நலிவன்றோ வென்பது திருவுள்ளம். எண்ணுகிறாய் -சிந்தை செய்துகொண்டிருக்கிறாய்; ஆழ்வார் தம்பக்கல் கிட்டாதபடி பண்ணுகைக்கு உபாயமேதோவென்று சிந்தியாநிற்கிறானென்றபடி-இதுதான் ஈசுவரனுக்குஒரே சிந்தையென்று தூஷிக்கிறபடி.

விசேஷக் குறிப்பு I:—உபகாரகனை ஈசனை அபகாரகனாகவே சொல்லுகிறது, ஆழ்வாருக்குப் பகவானோடு உறவுமிகுந்திருப்பதால் வந்ததெனக்கொள்ள வேண்டும். இப்படிக்காகுமோவென்றால் சீதாபிராட்டி,தம்மைக் காட்டுக்கு இராமபிரான் கூட்டிச்செல்ல மாட்டேன், துஷ்டஜந்துக்களும்ராக்ஷஸர்களும் நலிவார்கள்,வழியும் எளிதல்ல வென்று சொன்னதற்கு

"ஆண்மையற்று அகதியான பெண்ணைக் காப்பாற்ற சக்தியில்லாத புருஷவேடம்தரித்தவனுக்கு என்பிதா வாழ்க்கைப்படுத்தினா"ரென்று இராமபிரானைப் "புருஷவிக்ரஹம்" என்று நிந்தித்ததைக் கவனித்தால் அத்தியந்தம் பக்தியுள்ளவர்களின் முக்கிய கருத்தையும் கூட்டுறவையும் வேண்டாமென்று தடுத்தால் கடுஞ்சொல் கூடாதாயினும் ஏற்படப்பிராப்தம்.

விசேஷக் குறிப்பு II:—இத்தசகத்தில் பகவான் பக்தர்களை அநுட்டானத்தில் மூட்டியபின்பு அவனையணுகத் தடுக்கின்ற விரோதிகளை ஒழித்துக்கொள்ள முயற்சித்தால் அவைகளைத்தொலைத்துத்தருமென்று கற்பிக்கிறார்.

விசேஷக் குறிப்பு III:—ஊர்ஜிதமான பக்தியுண்டாய் அவனை யடையவேண்டுமென்ற ஆசை முடுக்க அதினால் கடுக அவனைக் கிட்டவில்லையேயென்ற துக்கத்தால் பக்தர்கள் நிந்தித்தாலும், அனாதரவு செய்தாலும், பகவான் இவ்வபசாரத்தைத் தன் கருணையால் ஸஹிப்பானென்று கற்பிக்கின்றார்.

இரத்நாவளி

[ஸ்ரீஹர்ஷதேவர் எழுதிய வடமொழி நாடகத்தின் வழிபற்றி எழுதியது.]

அங்கம் 1.

இடம்:—வத்ஸராஜன் மாளிகை.

[கௌசாம்பிநகரத் தரசன் வத்ஸராஜனது மந்திரி யௌகாந்தராயணன் வருகின்றான்.]

யௌகந்த:—உண்மையேயிது! நம் விதிதான் நல்லதாயின், தூரத்திருந்த தீவுகளிலிருந்தும், நெடுங்கடற் பரப்பைக் கடந்தும், உலகின் எல்லையிலிருந்தும், நம்மைவிட்டுப் பிரிந்திருந்தவர்களை விரைவிற்கொணர்ந்து நம்பால் அளித்துவிடும். இல்லையேல், முனிவர் உரைப்படி நாம் ஆள்விட்டழைக்க, எம் புகழ்மிகு வேந்தனுக்கு மணாட்டியாகுமாறு இலங்கைமன்னன் விலைமிகு பரிசிலொடு விடுத்த அவன் எழில்மிகு புதல்வி அழிந்திடாமல் தப்பியதுதா னெங்ஙனம்?உடைந்த கப்பலின் ஒரு சிறு பலகையில் மிதந்திருந்த அவளை நம்கௌசாம்பிவணிகன் ஒருவன்கண்டான். அவள் அணிந்திருந்த விலையரிய மணிமாலை அவள் உயர்பெருங் குலத்தினள் என்பதை யுணர்த்த, மாண்புற அவளைப்போற்றி இந்நகர் கொணர்ந்தனன். விதியோ இன்னும் நம் மன்னன் திறத்தில்நகைமுகம் புரிந்தது. அவ்வனிதையை அரசியின் பாதுகாவலில் பெருமையுற வைத்துள்ளேன். நம்தூதன் பாப்ரவ்யனும் ஸிம்மளதேயத்துமந்திரி வஸுபூதியும், கோசல வேந்தன்மீது தண்டுகொண்டுசென்ற ருமண்வானைச் சந்தித்துப் பின் இவ்வழிக்கொண்டுளர் என்று கேள்விப்படுகின்றேன். இனி இதன்முடிவு யாதாகுமோ வென்று நான் அஞ்சுவதற்கோ அவசியமில்லை. ஆயினும் உண்மை மந்திரிக்குக் கவலைகள் அதிகம். என் அரசன தாட்சியை மேன்மைப்படுத்தியுயர்த்துவதே என்பெருங் கருமமாம்; விதியும்என் எண்ணத்திற்கு உதவிசெய்கின்றது. முனிவரதுஜோதிடமும்பொய்க்காது.நான் இனி அயிர்ப்பதெல்லாம்என் அரசனையே. ஏனெனில் எந்நாளும் அவனே தன்மனம் இழுத்தபடியெல்லாம்தொடரவே விரும்புகின்றான். (மத்தளவொலி கேட்கின்றது). இசைகளும் இரைச்சலும் கூடிய இம் மத்தளவொலி நம்ஜனங்களின் குதூகல மகிழ்ச்சியை இனிது தெரிவிக்கின்றது. காமதேவன் திருவிழாவைச் சனங்கள் கொண்டாடுகின்ற விளையாட்டுக்களிப்புக்களைக் காணுமாறுஅரசன் தன் அரண்மனையை விட்டுப் புறப்பட்டு வந்திருக்கிறான் என்று எண்ணுகின்றேன். ஆம், முற்றத்தின்கண் நண்ணி சமர்செய்யும் சரிதங்களில் சலிப்புற்று, ஜனங்களின் இதயங்களில் தன் கீர்த்தியை நாட்ட நினைத்தவனாகி, தன் தோழன் வஸந்தகன் உடன்வர, பூங்கணைக் கடவுளை போன்ற தோற்றமுடன், அவனது பக்தர்களினது இன்பத்தில் தானும் பங்குகொள்ள வருகின்றான். நான் என் மனையகம் சென்று, மேற்கொண்ட இக்கருமம் இனிது நிறைவேறுதற்குரிய வழிகளைச் சிந்திப்பேன். (போகிறான்)

[வசந்தகாலத் திருவிழாவிற்குரிய அலங்காரமுடன் வத்ஸராஜன் வீற்றிருக்க அவனருகு அவன்தோழன் வஸந்தகன் நிற்கிறான்.]

வத்ஸ:—தோழா!

வஸந்:—எனதரசே!

வத்ஸ:—என் மனத்திலுள்ள அமைதியின் இன்பம்சொல்லுந் தரமன்று. பகைவரனைவரும் தொலைந்தனர்; எனது அரசின் பாரம் திறமுடைய தோள்களால் தாங்கப்பெறுகின்றது; பருவங்கள் பிழைக்காமல் இனிது நடக்கின்றன; எனது ஜனங்கள் செல்வமும் இன்பமும் உடையவர்களா யிருக்கின்றனர். பிரத்யோதன் புதல்வியை எனக்கொரு நன் மனைவியாய் வாய்க்கப்பெற்றேன். வஸந்தகா, என்மனத்திற்கிசைந்த நண்பனாக உன்னையும் பெற்றேன். இந்தப் பருவத்தில், நீஎன் னருகிருக்க, மனமுவந்திருக்கும் நானே அக் காமதேவனென்றும், இவ் வசந்தத்திருவிழா என்பெருமைக்கே நடைபெறுகின்றதென்றும் மதிப்பவனு மாகின்றேன்.

வஸந்:—அரசே, இதனில் எனக்கொரு பங்கு நீயேதந்து சேர்த்துக்கொள்கின்றாயாதலின், நானே முழுவதையும் கேட்டு வாங்கிக்கொள்ள விழைகின்றேன். உன் மதிப்பினால் இத்துணை உயர்த்தப்பட்ட நான், இந்தத்திருவிழா எனதேயென்று வற்புறுத்துவேன். ஜனங்களின் உவகையை உற்றுப்பார். களிப்பினால் மயங்கினார்போல் ஜனங்கள் வீதியூடு நடனமாடி விளையாட்டயர்ந்து ஒருவர்மீதொருவர் மஞ்சள் நீரை வீசிக்கொள்கின்றனர். எப்பக்கமும், தண்ணுமையின் இன்னிசையும், ஜனங்களின் குதூகல அமலையும் மயங்கி நிறைகின்றன. பூவின் நன்மணப் படலங்கள்பரவ இக்காற்றெல்லாம் மஞ்சள்நிறமாக மாறியிருக்கின்றது.

வத்ஸ:—நம் எதிரே தோன்றுகின் ... ரிய

மாளிகை களிப்புமிகுமக்களால் நிறைந்திருக்கின்றது. இக் கௌசாம்பி இத்தகைச் செல்வமுடையதென் பதைநான் இதுகாறும் அறிந்திலேன். குபேரன் வாழ் கின்றஅளகையை இது வென்றுவிட்டது. இந்நகரச் செல்வமக்கள், செந்நறுந் தாதுபடிந்தும் மஞ்சள்நீர் தோய்ந்தும் விளங்குகின்ற பொன்னுடைகள் உடுத்து, ஒளிர்கின்ற அணிகலன்கள் பூண்டு,காமனே யணியத் தக்க சீரியமுடிகள் தரித்துத் தம் சிரங்களை நிமிர்த்திப் பெருமிதத்துடன் நடமாடுகின்றனர்.

வஸந்:—மதனிகையும் சூடலதிகையும் வருகின் றனர், பார். வசந்தக்கடவுளின் ஆட்சிக்கு உட்பட் டிருக்கின்றனர் என்பதை அவர் செய்யும் அவிநயங் கள் காட்டுகின்றன.

[அரசியின் பணிப்பெண்களில் இருவராகிய மதனிகையும் சூடலதிகையும் ஆடலும் பாடலும் புரிந்துகொண்டு வருகின்றனர்.]

மதனிகை:—வழிவழி சிறக்க, மன்னவா, நின் புகழ்! அரசியின் கட்டளை - பொறுத்தருள் - வேண்டு கோள், யாதெனில்......

வத்ஸ:—மதனிகா, நீ முன்னர்ச் சொன்னதில் யாதும் பிழையில்லை. அரசி, மதனனுக்கு உகந்த இவ் வேனிற்பருவத்தில், கட்டளையிடுதலே தகும். அவள் உத்தரவு யாது சொல்!

மதனிகை:—நம் அரண்மனை நந்தவனத்திலுள்ள அசோகத்தருவினடியில்அமர்ந்திருக்கும் பூங்கணைக் கடவுள் விக்கிரகத்தைப் பூசிக்க நினைத்துளள்; அரசர் பெருமானும்அங்கு வருதல்வேண்டுமென்பதுஅவள் விருப்பம்.

வத்ஸ:—நண்பா, ஒரு திருவிழாவிலிருந்து மற்று மொன்று எவ்வாறு பிறக்கின்றது காண்.

வஸந்:—அவ்விடம் செல்வோம். நானே இப்பூ சைக்கு அர்ச்சகனாக இருப்பேன். நான் பூசை செய் வித்து ஆசிர்வதித்தால் அது விளைவின்றி வீணாகாது.

வத்ஸ:—மதனிகா, நீமுன்னே சென்று, நந்தனவ னத்தின்கண் வந்து சந்திப்போமென எம்அரசிக்குச் சொல்.

மதனிகை:—அரசே, நின் ஆணையின்படி ஆகுக. (போகின்றனர்)

வத்ஸ:—நண்பா, வா; நந்தனவனத்திற்கு வழிக் கொள்வோம்.

(இறங்கிச் செல்கின்றனர்)

வஸந்:—அரசே, இதுதான் இடம். மாம்பூவின் மகரந்தத்தை விதானமெனத் தென்றல் தூவி விரிப்ப தைக்காண். நம்மை நல்வரவுகூறியழைக்கின்ற குயில் களின் குரலையும் வண்டுகளின் இசையையுங் கேள்.

வத்ஸ:—இப்பொழுது எழில்மிகுந்து பொலிகின் றது இப்பொழில். பருவத்தினுவகையை இத்தருக் களும் பங்குகொண்டுள்ளன. புதிதீன்றதளிர்களெல் லாம் பவளங்கள். காற்றினால் உயிர்பெற் றலைகின் றன அவைகளின் கிளைகள். தழைகளூடு களிப்புடன் முரல்வன மதுகரங்கள். மாணிக்கங்களென்னக் காந் தளின் செம்மலர்கள் உதிர்ந்துள. அசோகத் தருவி னைத் தீண்டுமா றுயர்த்திய மெல்லடிகளின் சிலம்புக ளுக்கெதிர் சுரும்புகள் இனிது இசைக்கின்றன.

வஸந்:—அரசே அன்று. சிலம்பின் ஒலியை ஒத் திசைப்பது வண்டுகளல்ல. அரசி தன் பரிவாரத்தின ருடன் வருகின்றனள்.

வத்ஸ:—ஆம்; வந்துவிட்டனர். நாம் ஒருபுறம் ஒதுங்கி நிற்போம்.

[காஞ்சனமாலை, ஸாகரிகை முதலிய மாதர் புடைசூழ, அரசி வாஸவதத்தை வருகின்றாள்.]

வாஸவதத்தை:-காஞ்சனமாலா, நாம் சேரவேண் டிய சோலை எங்குளது?

காஞ்ச:—இதுவே, எம்பெருமாட்டி.

வாஸவ:—நான் மதனனை வணங்கவேண்டிய அவ் வசோகமரம் எங்குளது?

காஞ்ச:—அதோ தெரிகின்றதே. எம்பெருமாட்டி நீயே நட்ட அம்மாதவிக்கொடி இது, இப்பொழுது பூவின்செல்வமுடன் பொலிகின்றது. இம்மல்லிகைச் செடியை நமது அரசர்பெருமான் ஆதரித்துவளர்த்து, பருவமின்றியேயும், பூக்குமென எதிர்பார்க்கிறார்—ஆம் இதுதான் அவ் வசோகமரம்.

வாஸவ:—நன்று, பூசைப்பொருள்களெங்கே?

ஸாகரிகை:—அன்னாய், இதோ (கொடுக்கின்றாள்)

வாஸவ:-(அவளை உற்றுநோக்கிப் பிறகு மறுபுறந் திரும்பி) என்ன இப்படி அயர்ந்தேனே. நான் எவ் வளவோ ஜாக்கிரதையாய் மறைத்து வைத்திருந்தது இப்படி வெளிப்பட்டு விட்டதே: ஆகட்டும். (ஸாக ரிகையைப் பார்த்து) என்ன, ஸாகரிகா, யாது செய் கின்றாய் இங்கு நீ! நீ பாதுகாக்கும்படி நான் உன்னி டம் கொடுத்திருந்த நாகணவாய்ப்புள் எங்கே; இவ் விழவினைக் காணும்பொருட்டு நீ, அதனைக் காவாது விட்டனையோ. ஏகு நீ. பூசைப் பொருள்களைக் காஞ் சனமாலையினிடம் கொடுத்துவிட்டு நீதிரும்பிச்செல்.

ஸாகரிகை:-அப்படியே, எம்பெருமாட்டி (பூசைப் பொருள்களைக் கொடுத்துவிட்டுச் சிறிது அகன்று செல்கின்றாள்.) என் தோழி ஸுஸங்கதையிடத்தில் அப்பறவை யாதுந் தீதின்றியிருக்கின்றது. இச்சடங் கினைக் காணவேண்டுமென்னும் அவாவுடையவளாக இருக்கின்றேன். என் தந்தையின் மாளிகையில் ஆரா திப்பதுபோன்றே இங்கும் அனங்கனை ஆராதிக்கின் றனரோ, யாதோ? இந்தப் பூங்கொடிகளினிடையே மறைந்துநின்று இவ்விடம் நிகழ்வனவற்றைக் காண் பேன். நானும் அக்கடவுளுக்கு அருச்சனைபுரிவதற்கு மலர்கள் கொய்தல் வேண்டும். [போகின்றாள்]

வாஸவ:—ப்ரத்யும்னதேவனை இத்தருவின் அடி யில் வையுங்கள்.

காஞ்ச:—(பூசைப்பொருள்களை முறைப்படி வை த்து) எம்பெருமாட்டி, ஆயிற்று.

வத்ஸராஜன்:-வஸந்தகா, வா. அனைத்தும் ஆயத்த மாயின. சென்று நாம் இனி அவர்களைச் சேர்வோம். மகரக்கொடியோனருகு நிற்கின்றாள் அரசி. அவன் கை வில்லேபோல் வனப்புடையினிப்பினள்; அவன் கை வாளியாம் மலர்களினும் மெல்லியள். எனதன்பு டைத் தலைவி, வாஸவதத்தா!

வாஸவ:—என் தலைவன்! அவன் கொற்றம் பெரு குக: இவ்விடம்வந்து அவன் நம்சடங்குகளைச் சிறக் கச் செய்யட்டும்—அரசஆதனம் அது.

காஞ்ச:—பெருமாட்டி, இப்பொழுது பூசையைத் துவக்கலாம். அசோகத்தடியில் அமர்ந்த கடவுளுக் குச் சந்தனமும் மஞ்சளும் மலர்களும் நாம் ஸமர்ப் பிப்போம்.

வாஸவ:—அவைகளை எடுத்துக்கொடு.

[காஞ்சனமாலை கொடுக்க வாங்கி வாஸ வதத்தை அருச்சனை செய்கின்றாள்.]

வத்ஸ:—காவிநிறத்து உன் ஆடையும் தூநீராடிய உன் மேனித்தோற்றமும், எனதன்பே, பவழச்செடி யில் பூங்கொடி படர்ந்ததுபோல் தோன்றுகின்றனை. இவ்வசோகத் தருவினைப் பற்றியிருக்கும் நின்கரம், அம்மரம் புதுத்தளிரொன்று போக்கியது போன்று உளது. அனங்கன் இன்று நின் மெல்லிய கரங்கள் தீண்டுகின்ற ஓர் இன்பத்தைத் துய்க்குமாறு, பூதவுடம்பே உடையவனாகவேண்டி வறிதே நெட்டுயிர்த்து, உருவம் இல்லாத் தன்நிலைமையை நினைத்து நனிமிக இரங்குவான்.

காஞ்ச:—கடவுளாராதனை முடிந்தது. எம்பெரு மாட்டி இனி நீ, நின்நாதனை வழிபடல் வேண்டும்.

வாஸவ:—மலர்கள் எங்கே?

காஞ்ச.—இதோ, அன்னாய்.

[வாஸவதத்தை அரனுக்கு வழிபாடு புரிந்து வணங்குகின்றாள்]

[ஸாகரிகை திரும்பி வருகின்றாள்.]

ஸாகரிகை:—மலர்கள் கொய்வதில் நான் காலந் தாழ்த்தினேன். சடங்குகள் முடிந்துவிட்டனவோ! என்னை அவர் காணாமல் நான் இம்மரத்தின் மறைவி லிருந்து அனைத்தையுங் காணலாம். என்னவிது! இ துவும் உண்மையாக இருத்தல் இயலுமா! எனது தந்தையின் மாளிகையில் எந்தத் தெய்வத்தின் விக் கிரகத்தை ஆராதிக்கின்றோமோ அந்தத் தெய்வமே தன் பக்தர்களின் வழிபாட்டினை நேராக இங்குவந் தேற்றுக்கொள்ள இசைந்ததோ! தூரத்தே அகன் றிருப்பினும் நானும் என் ஆராதனையைச் செலுத்து கின்றேன் (மலர்களைத் தரையில் தூவுகின்றாள்). பூ வாளி மதனன் வாழ்க! நின்னை யானிங்கு நல மறக் கண்ட இக்காட்சி, இன்றும் பின்னரும் எனக்கு வீணாகாம லிருக்கவேண்டும் (தலைவணங்கி நிமிர்கின் றாள்). காணக்காண வேட்கை விளையும் காட்சி இது. என்னை யாரேனும் இங்குக் கண்டுவிட்டால் என்ன செய்வது;ஐயோ,மற்று எப்படி நான் என்னைப் பிய்த் துக்கொண் டகல்வேன்.

(சிறிது பின்செல்கின்றாள்)

காஞ்ச:—வஸந்தகா, வா. வந்து உனக்குரியவற் றைப் பெற்றுக்கொள்.

வாஸவ:— தக்கோய், இவைகளை யேற்றுக்கொள்.

(சந்தனம் மலர் அணிகலன்கள் கொடுக்கிறாள்)

வஸந்:—மேன்மேல் நன்மையே நினக்கு எந்நா ளும் பெருகட்டும்.

வத்ஸ:—மாலை சூழ்கின்றது. தூய்மை மிகு இவ் வினியதொழிலில் மனந்துறந்திருந்தநாம் காலத்தின் செலவைக் கருதினோம் அல்லோம். காதலனைப்பிரிந்த கன்னியேபோல் ஒளியிழந்த கீழ்வானம் தன் தலைவ னது வருகைக்கு ஆர்வம் கைம்மிகக் காத்திருக்கின் றது காண். சென்றுநாம் நமது அரண்மனையைச் சேர் வோம்.

[எழுந்திருக்கின்றனர்]

ஸாகரிகை:—(ஒருபுறமாய்) இவ்வழி வருகின்ற னர். விரைந்து நான் அகலல் வேண்டும். ஐயகோ, என் செய்வேன். இறுதியின்றி யான் நோக்கியிருக்க விழையும் அவனை இனிக் காணமற் போவதெங்ங னம்.

வத்ஸ:—இனியாய் வா. நின்னைக்கண்டு நாணும் இவ்விரவு. நின் முகத்தின் ஒளியால் மதியின் அழகு மங்கிவிட்டது. தாமரையும் முகங்குவிந்து ஒடுங்கு கின்றது. உன்னுடன்வரும் வனிதையர் பாடும் இன் னிசைக்குத் தோற்ற வண்டுகள், பரிபவத்தால், மலர் களின் இதயத்தினுள் ஒளித்துக்கொள்ள விரைகின் றன.

[போகின்றனர்]

முதலங்கம் முற்றிற்று.

கலா நிலயம்

முன்னைய வால்யூம்கள் இன்னும் சிலவே இருக்கின்றன
உடனே பெற்றுக்கொள்வது நலம்.

1928, 1930, 1931, 1932, 1933 வருடத்தியவை கிடைக்கும்.

பைண்ட் செய்யாதவை—ஒவ்வொரு வால்யூமின் விலை ரூ.	7	8	0
ஆப்லெதர் கில்ட் பைண்ட் ,,	9	0	0
ஒரு வால்யூமை இரண்டு பாகமாகப் பிரித்துப் பைண்ட் செய்தது	10	0	0

இந்தியாவிற்குள் இருப்பவர், இரயில்வே பார்சல் மூலமாகப் பெற்றுக்கொள்ள லாம். பர்மா, ஸிலோன், மலேயா முதலிய இடங்களுக்குத் தபால் மூலமாகத் தான் அனுப்ப இயலும். இந்தியா பர்மா ஸிலோனில் உள்ள இடங்களுக்கு வால்யூம் ஒன் றிற்கு ரூ. 2-ம், மலேயா, தென்னுப்பிரிக்கா முதலிய வெளிநாடுகளுக்கு ரூ. 3-ம், தபால் பார்ஸல் சார்ஜ் ஆகும்.

இந்தியாவில் உள்ளவர் வேண்டிய வால்யூமின் விலையை அனுப்பித் தம்மூருக்கு அடுத்திருக்கும் இரயில் ஸ்டேஷனைத் தெரிவிக்கவும். அல்லது தபால் பார்ஸலில் பெற்றுக்கொள்ள விரும்பினுல், அந்தக் கட்டணத்தையும் சேர்த்து அனுப்பவும்.

வெளி நாடுகளில் உள்ளவர் வேண்டிய வால்யூம்களின் விலையையும் தபால் கட் டணத்தையும் சேர்த்து அனுப்புதல் வேண்டும். இவைகளை வி. பி. யில் அனுப்ப இயல்வதில்லை.

199194

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட்ஸ் நஞ்சன்கூடு "சத்வைத்யசாலை" மருந்துகள்
"ஆல்மண்டைன்" (டானிக்). "பாலக்ஸ்" பேதிமாத்திரை. "ஸ்ப்ளீவரால்" (குழந்தை கட்டிக்கு)
குமார் 300 போலிகள் ஏமாற்றும்.
டீட்ச்யாவனப்ராசா · டீட்பிருங்காமலக தைலம் · கோரோஜனை மாத்திரை
"நஞ்சன்கூடு பல்பொடி"
அதூரணம்·மாக்கேட் · மேடிகேடட்·டப்பி
தயவுசெய்து கவனித்து வாங்கவும்.
டீட்ச்யாவனப்ராச சிறந்த டானிக் சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு
காஸ்ட்ராலகுளி
ஜவரேக்
[பஸ்மங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.]

KALANILAYAM
REG. NO. M. 2324.

வர்த்தமானம்

கிழவர் கோடுமை:—மத்ய மாகாணத்தில் யோத்மால் ஜில்லா கோட்வரர் கிராமத்தைச் சேர்ந்த டாஸ்கோ என்ற கிழவருக்கு 60 வயதாகி விட்டதால் கிராம முனிசீப் வேலையிலிருந்து விலகும்படி உத்தர விடப்பட்டார். இந்தக் கிராமமுனிசீப் வேலை அவரது குமாரன் சம்பத்திற்கு கொடுக்கப்பட்டது. டாஸ்கோ வயதாகியும் கிராமமுனிசீப்பாக இருக்க விரும்பினர். அவர் செய்துகொண்ட அப்பீல் பலிக்கவில்லை. இதனுல் அவர் ஆத்திரமடைந்து தமது குமாரனைப் பழிவாங்குவதற்காகத் தனது குமாரனும் மருமகளும் வீட்டில் இல்லாதபோது அவர்களது 10 வயதும் 3 வயதுமுள்ள குழந்தைகளைக் கொன்றுவிட்டார். சிறிதுநேரம் இவர் தமக்கு எதுவும் தெரியாதென்று நடித்தபோதிலும் பிறகு குற்றஞ் செய்ததை ஒப்புக்கொண்டார். ஜட்ஜ் இவருக்கு பரண தண்டனை விதித்தார்.

* * *

உலகத்தின் ஜனத்தொகை ஆண்டுக்கு இரண்டு கோடி வீதம் பெருகிவருகிறதாம்.

* * *

அமெரிக்கா ஐக்கிய நாட்டில் முக்கால் மணி நேரத்திற்கு ஒரு கொலைவீதம் நடந்துவருகிறதாம்.

* * *

நிறைக்கேற்ற வரி:—இத்தாலி நாட்டில் ஒரு நகரில் ஜனங்களுக்கு அவர்கள் நிறைக்குத் தக்கவாறு வரி விதிக்கிறார்களாம்.

* * *

குழந்தையைப் போஷிக்கும் குரங்கு:—அமெரிக்காவைச் சேர்ந்த ஷெல்டன் என்ற நகரின்கண் ஒரு விநோதக் குரங்கு வசித்துவருகிறது. இந்தக் குரங்கை ரீவன் என்ற அமெரிக்கர் தன் குழந்தைகளோடு சேர்த்து அருமையாக வளர்க்கிறார். இந்தக் குரங்கு தினந்தோறும் குளித்துத்தான் சாப்பிடுமாம். தனது சொந்தக்காரருடைய மூன்று வயதுக் குழந்தைக்குத் தினம் பாலும் அன்னமும் கொடுத்துப் போஷித்து வருகின்றதாம். தனக்கு நேரமாகிப் போஜனமளித்தால் கூக்குரலிடுகின்றதாம். குழந்தைகளோடு அது களிப்பாக விளையாடிக்கொண்டிருக்கிறதாம்.

* * *

நிறமாறும் கோழி :—இந்தியாவில் ஹாமாண்ட் என்னும் இடத்தில் உள்ள ஸ்ரீமதி எச். லென்ஸ் என்பவரிடமுள்ள பிட்டி யென்ற அருமையான கோழி ஆண்டுக்கு ஒரு முறை நிறமாறிக்கொண்டிருக்கிறதாம். முதலில் வெள்ளையாக இருந்ததாம். பின் கருப்பாயிற்று. பின் கபிலநிறமாய் விட்டதாம்.

* * *

பனிக்கட்டிச் செடி:—வட துருவத்திலுள்ள லாப்லாந்து தேசத்தில் ஒரு விநோத செடி வளருகின்றதாம். அந்தச்செடி பனிக்கட்டியில்தான் வளருமாம். அதனுல் அதைப் பனிக்கட்டிச் செடி யென்று கூறுகிறார்கள். இந்தப் பனிக்கட்டிச்செடி ஆறு இதழ்கள் உள்ள பூ பூக்கின்றதாம்.

* * *

மனைவியைத் தூக்கிச் சென்றவர் :— ஆஸ்டிரியாவைச் சேர்ந்த முன்ஷ் என்ற வைத்தியர் பாரிசில் நடைபெற்றுவரும் வருடாந்திரக் கண்காட்சியைப் பார்க்கத் தனது மனைவியைத் தூக்கிக்கொண்டு கால்நடையாகவே 720 மைல் நடந்து சென்றாராம். இவர் பாரிசை அடைந்ததும் ஜனங்கள் இவரைத் தூக்கிக்கொண்டு கூத்தாடினார்களாம்.

NATIONAL INSURANCE COMPANY, LIMITED.
Head Office :
NATIONAL INSURANCE BUILDING,
362, China Bazar Rd, Esplanade, Madras.

1933 Results.

New Business Completed exceeds ... ... Rs. 1,67,00,000

The Company with a steady progress all round.

All forms of life assurance policies issued at low safe rates of premium.

Specialities.

Female Lives
Joint Lives
Permanent Protection Policies
Triple Benefit Policies.
Marriage & Future Provision Policies.

For agencies please apply to:—

Branch Secretary, 362, China Bazar Road, Esplanade, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

Consult
NATIONAL FIRE
AND
GENERAL INSURANCE COMPANY Ltd.,
Head Office:—
NATIONAL INSURANCE BUILDING,
362, China Bazar Rd, Esplanade, Madras.
for Fire, Motor & Accident policies.

A sound Company.

Please apply for particulars to:—

Branch Secretary, 362, China Bazar Road, Esplanade, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

யுனைடெட் இந்தியா
லைப் அஷ்யுரன்ஸ் கம்பெனி, லிமிடெட், சென்னை.

ஹெட் ஆபீஸ்:—சென்னை. 1906ஹு ஸ்தாபித்தது.

யுனைடெட் இந்தியாவில், லைப் இன்ஷுயரன்ஸின் சிறந்த பயன்கள் குறைந்தசெலவில் கிடைக்கும்.

யுனைடெட் இந்தியாவில் பாலிஸி எடுத்துக்கொள்வது மிகச்சிறந்த இன்வெஸ்ட்மெண்டும், வயது காலத்திற்கும் குடும்பத்திற்கும் இணையற்ற ஆதரவும் ஆகும்.

யுனைடெட் இந்தியாவே, தென்னிந்தியாவில் மற்றெல்லாக் கம்பெனிகளுக்கும் முன்னுல் ஸ்தாபித்தது.

யுனைடெட் இந்தியா முற்றிலும் பத்திரமானதும் கெட்டிதிட்ட முடையதும் ஆன கம்பனி.

ஹெட் ஆபீஸ்:— **செம்புதாஸ் தெரு, சென்னை.** அல்லது இந்தியா, பர்மா, ஸிலோனில் உள்ள பிராஞ்சுகள்

இவைகளுக்கு எழுதி முழு விவரமும் இது பற்றிய பிரசுரங்களும் பெற்றுக்கொள்ளலாம்.

சிறந்த பலவிருத்தி ஔஷதம்

சென்ற 53 வருஷங்களாகப் பேரும் புகழும் பெற்று உலாவி வருகின்றன.

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்

மலச்சிக்கல், தேகஅசதி நரம்புகளின் தளர்ச்சி, ஞாபகக் குறைவு முதலிய வியாதிகளைக் கரஸ்தமாகக் கண்டிக்கும்.

32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூ. 1

இனும்! “காம சாஸ்திரம்” இனும்!!

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26 பிராட்வே, மதராஸ்.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)